NDB வங்கி
எதிர்கால வங்கியியல் முன்னோடி

# NEOS CORPORATE நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

## நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி பதிவு இல. PQ 27

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி இற்கு
இல. 40, நவம் மாவத்தை,
கொழும்பு 02

திகதி:…………………………….

……………………………………………………………. என்னும் முகவரியைச் சேர்ந்த …………………………………………………………………… (“**வாடிக்கையாளர்**”) ஆகிய நாம், பின்வரும் NEOS Corporate நியதி நிபந்தனைகளின் மீதும் அவற்றுக்கு அமையவும் (இதனகத்துப்பின்னர் “**Neos Corporate**” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் வங்கித்தொழில் சேவையை நாம் பயன்படுத்துவதனை அனுமதிப்பதற்கு (இதனகத்துப்பின்னர் “**வங்கி**” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி இனை இத்தால் கோருகின்றோம்;

### 1. வரைவிலக்கணங்கள்

இந்நியதி நிபந்தனைகளில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்துகின்ற அளவுக்குத் தவிர:

**(அ) “கணக்கு பற்றிய பொறுப்பாணை”** என்பது, கணக்கு தொடர்பான பொறுப்பாணைப் படிவம் மற்றும் வேறு எவையேனும் நியதி நிபந்தனைகள் எனப் பொருள்படும்.

**(ஆ)“கணக்கு/கணக்குகள்”** என்பது, Neos Corporate இணைய வங்கித்தொழில் விண்ணப்பத்தில் நிரற்படுத்தப்பட்டவாறான அல்லது வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையில் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான எந்தக் கணக்கு/கணக்குகள் தொடர்பில் இந்நியதிநிபந்தனைகள் ஏற்புடையனவாதல் வேண்டுமோ அந்தக் கணக்கு / கணக்குகள் எனப் பொருள்படும்.

**(இ) “அறிவித்தல்”** என்பது, வங்கியினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அல்லது வடிவத்தில் முறைமையினூடாக அல்லது வேறுவகையாக வங்கியிடமிருந்து வாடிக்கையாளரினால் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட பயனரினால் பெறப்படும் ஒரு வசதி அல்லது வசதிகள் அத்துடன் / அல்லது ஒரு சேவை தொடர்பான ஏதேனும் அறிவித்தல், உறுதிப்படுத்துகை, அறிவுறுத்தல் அல்லது வேறு அனுப்புகை எனப் பொருள்படும்.

**(ஈ) "விண்ணப்பம்"** என்பது, இந்நியதி நிபந்தனைகளுடன் சேர்த்து Neos Corporate இணைய வங்கித்தொழில் விண்ணப்பப் படிவம் எனப் பொருள்படும்.

**(உ) "அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள்"** என்பது, வாடிக்கையாளரினால் முறைமையை அணுகுவதற்கும் அதனைப் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்படுகின்றவர்களும் வாடிக்கையாளரினால் வங்கிக்கு வழங்கப்பட்ட சபைத் தீர்மானமொன்றின் மூலம் நியமிக்கப்படுகின்றவர்களுமான வாடிக்கையாளர்களின் ஊழியர்கள் எவர்களும் ஆவர் எனப் பொருள்படும்.

**(ஊ) "வங்கி"** என்பது, இலங்கைச் சட்டங்களின்கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்டதும் கொழும்பு 02, நவம் மாவத்தை, இல. 40 இல் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான கம்பெனியொன்றாகவுள்ள நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி, அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்கள் எனப் பொருள்படும்.

**(எ) "சபைத் தீர்மானம்"** என்பது, Neos Corporate இணைய வங்கித்தொழில் சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக வாடிக்கையாளரின் பணிப்பாளர்கள் சபையினால் உரியமுறையில் நிறைவேற்றப்படும் தீர்மானம் / தீர்மானங்கள் எனப் பொருள்படும்.

**(ஏ) "குறிக்கப்பட்ட சாதனம்"** என்பது, வாடிக்கையாளர் Neos Corporate இணைய வங்கித்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியதாகவுள்ள வாடிக்கையாளரின் தகவுடைய இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் இணைய வசதியுடனான இணைந்த சாதனம் எனப் பொருள்படும்.

**(ஐ) "பணிப்புரை"** என்பது, எங்கேனும் உள்ள ஏதேனும் நியாயாதிக்கத்தின் ஏதேனும் விடயத்தில் (சட்டவலுவுடையதாக இருப்பினும் அல்லது இல்லாமல் இருப்பினும் ஆனால், சட்ட வலுவைக்கொண்டிராவிடின், பணிப்புரையுடனான இணங்கியொழுகுகை, பணிப்புரை எந்த ஆட்களுக்கு அல்லது உருவகங்களுக்கு ஏற்புடையதாவதற்கு உட்கருதப்படுகின்றதோ அந்த ஆட்கள் அல்லது உருவகங்களின் பொதுவான செயன்முறைக்கு இணங்க இருப்பின் மட்டும்) ஏதேனும் முகவராண்மையின், ஏதேனும் அரசின் அல்லது ஏதேனும் சுய ஒழுங்குபடுத்தும் ஒழுங்கமைப்பின் ஏதேனும் பணிப்புரை, ஒழுங்குவிதி, கோரிக்கை, தேவைப்பாடு, விதி, தடை நிகழ்ச்சித்திட்டம், கொள்கை, வழிகாட்டுநெறி அல்லது அறிவித்தல் என்பவற்றை உள்ளடக்கும்.

**(ஒ) "வசதிகள்"** என்பது, திறத்தவர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நியதி நிபந்தனைகளின் ("வசதி உடன்படிக்கைகள்") மீது வங்கியினால் காலத்துக்குக்காலம் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்றவாறான வங்கித்தொழில் வசதிகள், பலநோக்கு வங்கித்தொழில் வசதிகள், பலநோக்கு வியாபார வசதிகள் மற்றும் வியாபார வசதிகள் எனப் பொருள்படும்.

**(ஓ) "நிதிசார் தகவல்கள்"** என்பது, முறைமையினூடாக வங்கியிலிருந்து அல்லது மூன்றாம் திறத்தவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகின்ற வாடிக்கையாளரின் கணக்குகள் தொடர்பானதல்லாத தகவல்கள் எனப் பொருள்படும்.

**(ஔ) "பொதுவான தொழில் நிபந்தனைகள்"** என்பது, காலத்துக்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு வங்கியினால் நீடிக்கப்படும் சேவைகளுக்கு ஏற்புடையதாக்கப்படுகின்றவாறான பொதுவான தொழில் நியதி நிபந்தனைகள் எனப் பொருள்படும்.

**(க) "அறிவுறுத்தல்கள்"** என்பது, இந்நியதி நிபந்தனைகளுக்கு இணங்கவும் வங்கியினாலும் வாடிக்கையாளரினாலும் காலத்துக்குக்காலம் உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான அத்தகைய படிவத்திலும் அல்லது வடிவத்திலும் முறைமையினூடாக அல்லது வேறுவகையாக வாடிக்கையாளரிடமிருந்து அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட பயனரிடமிருந்து வங்கியினால் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு கணக்கு அல்லது கணக்குகள் அத்துடன் / அல்லது ஒரு சேவை தொடர்பிலான ஏதேனும் அறிவுறுத்தல், தரவு அல்லது வேறு அனுப்புகை எனப் பொருள்படும்.

**(ங) "புலமைச் சொத்து உரிமை"** என்பது, (பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத) ஏதேனும் பதிப்புரிமை, ஆக்கவுரிமை, வர்த்தகக் குறி, (பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத) சேவைக் குறி, வர்த்தக அல்லது வியாபாரப் பெயர், தரவுத்தள உரிமை, வடிவமைப்பு உரிமை, கணினி மென்பொருளைப் பயன்படுத்துவதற்கான உரிமை, இடவிளக்கவியல் உரிமை, வர்த்தக இரகசியம் மற்றும் உலகெங்கிலுமுள்ள வேறு ஒத்த எல்லா உரிமைகளும் எனப் பொருள்படும்.

**(ச) "இணையம்"** என்பது, அனுப்புகைக் கட்டுப்பாட்டு நடப்பொழுங்கு (TCP) மற்றும் இணைய நடப்பொழுங்கு (IP) ஊடாக உலகம் முழுவதும் உள்ள உள்ள கணினிகளை இணைக்கின்ற இணைத்தொடுத்த வலையமைப்பு முறைமை எனப் பொருள்படும்.

**(ஞ) "சட்டம்"** என்பது, எங்கேனும் உள்ள ஏதேனும் நியாயாதிக்கத்தின் ஏதேனும் விடயத்தில் ஏதேனும் தற்போதைய அல்லது எதிர்கால பொது அல்லது வழக்காற்றுச் சட்டம் மற்றும் ஏதேனும் அரசியலமைப்பு, தீர்வை, தீர்ப்பு, சட்டவாக்கம், கட்டளை, கட்டளைச்சட்டம், ஒழுங்குவிதி, நியதிச்சட்டம், பொருத்தனை அல்லது வேறு சட்டவாக்க வழிமுறை ஆகியவற்றை உள்ளடக்கும்.

**(ட) "இழப்பு"** என்பது, (முழுமையான நட்டோத்தரவாத அடிப்படையொன்றின் மீது முகாமைத்துவச் செலவுதொகைகள் மற்றும் சட்டக் கட்டணங்கள் உட்பட) எவையேும் மற்றும் எல்லா இழப்புக்களும், சேதங்களும், ஊறுகளும், தண்டங்களும், செலவுதொகைகளும் மற்றும் நேரடியான, விளைவாந்தன்மையினவான மற்றும் விசேட சேதவீடுகள் உட்பட செலவுகள், இலாபங்களின் இழப்பு, எதிர்பார்க்கப்பட்ட சேமிப்புக்களின் இழப்பு அல்லது கழிப்பனவு, வட்டி இழப்பு, , நன்மதிப்பின் இழப்பு மற்றும் தரவுகளின் இழப்பு எனப் பொருள்படும்.

**(ண) "Neos Corporate"** என்பது, வங்கியின் இணைய அடிப்படையிலான Neos Corporate சேவை எனப் பொருள்படும்.

**(த) "OTP"** என்பது, முறைமை தொடர்பான தனிநபர் அடையாளக் குறியீடு எனப் பொருள்படும்.

**(ந) "மீளளிக்கப்படத்தகு தொகைகள்"** என்பது, முறைமை, சேவைகள் தொடர்பில் அத்துடன் / அல்லது சேவை மட்ட நியமங்கள், பயனர் வழிகாட்டி, அத்துடன் / அல்லது கணக்கு பற்றிய பொறுப்பாணைகளுடன் சேர்த்து இந்நியதி நிபந்தனைகளின்கீழ் அல்லது அவை தொடர்பாக,

(i) பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிகள், பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள் மற்றும் வேறு வரிகள், அறவீடுகள் மற்றும் விதிக்கப்பட்ட ஒத்த பயனைக்கொண்ட விதிப்புக்கள்;

(ii) வங்கியினால் ஏற்க நேரும் தரகுப்பணம், அஞ்சல் மற்றும் ஒப்படைப்புச் செலவுகள், செலுத்தீடுகள், செலவுகள், முத்திரைத் தீர்வைகள் மற்றும் வேறு விதிப்பனவுகள்;

(iii) வங்கியினால் ஏற்கநேரும் ஏதேனும் பொறுப்பு; அத்துடன்

(iv) வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் தொகை,

எனப் பொருள்படும்.

**(ப) "சேவைகள்"** என்பது, காலத்துக்குக்காலம் வங்கி வாடிக்கையாளருக்கு வழங்குகின்ற முறைமை மற்றும் (கொடுக்கல்வாங்கலைத் தோற்றுவிக்கும் கருவிகள், பயிற்சி மற்றும் ஆதரவுச் சேவைகள் போன்ற) துணைநிலைச் சேவைகளைப் பயன்படுத்துகின்ற எவையேனும் இலத்திரனியல் நிதிச் சேவைகள் எனப் பொருள்படும்.

**(ம) "சேவை மட்ட நியமங்கள்"** என்பது, காலத்துக்குக்காலம் வங்கியின் இணையத்தளத்தில் அதனால் இற்றைப்படுத்தப்பட்டு கிடைக்கக்கூடியதாக்கப்படுகின்றவாறான சேவைகள் மற்றும் அத்தகைய சேவைகள் தொடர்பில் அப்போதைக்கு ஏற்புடையதாகக்கூடியவாறான விதிப்பனவுகள் தொடர்பான தகவல்கள் எனப் பொருள்படும்.

**(ய) "சொப்ட் டோக்கன்"** என்பது, கூகுள் எல்எல்சி இனால் வழங்கப்படும் கூகுள் ப்ளே ஸ்டோர் மற்றும் அப் ஸ்டோர் ஊடாக கிடைக்கக்கூடியதாக இருக்கும் கூகுள் Authenticator செயலி எனப் பொருள்படும்.

**(ர)"முறைமை"** என்பது, பயனர் வழிகாட்டியில் மிகவும் குறிப்பாக விவரிக்கப்படும் Neos Corporate என பெயரிடப்பட்ட Corporate இணைய வங்கித்தொழிற் தளம் எனப் பொருள்படும்.

**(ல) "முறைமைத் தவறுகை"** என்பது, முறைமையைப் பாதிக்கின்ற ஏதேனும் குறைபாடு, பிறழ் பணியாற்றுகை அல்லது வேறு தொடர்பான சூழ்நிலை எனப்பொருள்படும்; அவற்றின் விளைவாக வாடிக்கையாளர் அல்லது வங்கி முறைமையினூடாக அறிவுறுத்தல்களை அல்லது அறிவித்தல்களை அனுப்புவதற்கு அல்லது பெறுவதற்கு இயலாதவராகவிருப்பார்.

**(வ) "நியதிகள் மற்றும் நிபந்தனைகள்"** என்பது, இதன்கண் அடங்கியுள்ளவையும் காலத்துக்குக்காலம் திருத்தப்படக் கூடியவாறானவையும், குறைநிரப்பப்படக் கூடியவாறானவையும், புதுப்பிக்கப்படக்கூடியவாறானவையும், மீளக் கூறப்படக் கூடியவாறானவையும் அல்லது மாற்றீடு செய்யப்படக்கூடியவாறானவையுமான Neos Corporate நியதி நிபந்தனைகள் மற்றும் ஏதேனும் ஆவணத்தின் நியதிகளுக்கு இணங்க இந்நியதி

நிபந்தனைகளத் திருத்துகின்ற, குறைநிரப்புகின்ற, புதுப்பிக்கின்ற, மீளக்கூறுகின்ற அல்லது மாற்றீடுசெய்கின்ற அவ்வாவணம் எனப் பொருள்படும்.

**(அஅ) "பயிற்சி"** என்பது, ஒன்றில் வாடிக்கையாளரின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது வாடிக்கையாளரினால் பெயர்குறிக்கப்படும் வேறு ஏதேனும் இடத்தில் அல்லது மெய்நிகர அடிப்படையில் இடம்பெறக்கூடிய வங்கியின் பிரதிநிதிகளினால் நடாத்தப்படவேண்டிய பயிற்சி எனப் பொருள்படும்.

**(ஆஆ) "UB சாவி"** என்பது, முறைமை தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை மெய்யென உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக வங்கியினால் வழங்கப்படுவதும் ஒரு கணினி சிப்பையும் கொண்டிருப்பதுமான பிளாத்திக்கு அல்லது வேறு பாதுகாப்பு சாவிகள் / டோக்கன்கள் எனப் பொருள்படும்.

**(இஇ) "பயனர் வழிகாட்டி"** என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறு முறைமை தொடர்பாக வங்கியினால் அல்லது வங்கிக்காக வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் எழுத்திலான மற்றும் இணையம் மூலமான அறிவுறுத்தல் வழிகாட்டி மற்றும் வேறு அறிவுறுத்தல்கள் எனப் பொருள்படும்.

**(ஈஈ) "வேலை நாள்"** என்பது, கணக்கு ஒன்று உள்ள ஒவ்வொரு நியாயாதிக்கத்திலும் வர்த்தக வங்கிகள் அலுவலுக்காக திறக்கப்படுகின்ற ஒரு நாள் எனப் பொருள்படும் (ஆனால் சனி, ஞாயிறு தினங்களைத் தவிர்த்து).

**2. முறைமையைப் பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் புலமைச் சொத்து உரிமைகள்**

2.1 பயன்பாட்டு உரிமைக்கான கட்டணம் : வாடிக்கையாளர் வாசகம் 3.1 இல் (முறைமையைப் பயன்படுத்துவதற்கான உரிமைக்கான கட்டணங்கள்) தரப்பட்டுள்ளவாறு கட்டணமொன்றைச் செலுத்துவதன் பிரதிபயனாக, வங்கியானது சேவை மட்ட நியமங்கள் மற்றும் பயனர் வழிகாட்டியுடன் சேர்த்து இந்நியதி நிபந்தனைகளுக்கு இணங்க, முறைமையையும் பயனர் வழிகாட்டியையும் பயன்படுத்துவதற்கான பிரத்தியேகமற்ற உரிமையை வாடிக்கையாளருக்கு வழங்குகின்றது.

2.2 முறைமைக்கான உரித்து: முறைமை, பயனர் வழிகாட்டி அல்லது தொடர்பான பொருளுக்கான உரித்து அல்லது சொத்தாண்மை அக்கறை அல்லது அவற்றிலான புலமைச்சொத்து உரிமை எதுவும் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுவதில்லை அல்லது வாடிக்கையாளரினால் கொள்ளப்படுதலாகாது.

2.3 முறைமையின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு எதுவுமிருத்தலாகாது: வாடிக்கையாளர், இந்நியதி நிபந்தனைகளின் நியதிகள், பயனர் வழிகாட்டி மற்றும் எவையேனும் சேவை உடன்படிக்கைகளுக்கு இணங்கத் தவிர, முறைமையில் பயன்படுத்தப்படும் எல்லா அட்டவணைகளும், விளக்கப்படங்களும், கோட்டுப்படங்களும், தரவு நூலகங்களும்,

வடிவமைப்புக்களும், முன்வடிவமைப்புக்களும் / மாதிரிகளும், தொகுதி மாதிரிகளும், பணம் பெறுனர் நூலகங்கள், உள்ளீட்டு வடிவமைப்புக்கள், ஏற்றுமதி வடிவமைப்புக்கள், விரிவுத்தாள் திரை வடிவமைப்புக்கள், அச்செழுத்து ஒழுங்கேற்பாடுகள், காட்சிப்படுத்தல் தளக் கோலங்கள், மற்றும் படவுரு வடிவமைப்புக்கள், அத்துடன் நிதிசார் தகவல் அறிக்கைகள், தரவுத் தகவல் அறிக்கைகள், கொடுப்பனவு மற்றும் சேகரிப்பு அறிக்கைகள், திரவத்தன்மை முகாமைத்துவ அறிக்கைகள் மற்றும் திறந்த வடிவ செய்திகள் எல்லாம் உட்பட முறைமையை, பயனர் வழிகாட்டியை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை பிரதிசெய்தலோ அல்லது வேறு வகையாக பயன்படுத்துதலோ ஆகாது எனவும் வாடிக்கையாளரின் ஊழியர்கள், அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள், முகவர்கள் அத்துடன் / அல்லது வேறு மூன்றாம் திறத்தவர்கள் பிரதிசெய்தலோ அல்லது வேறு வகையாக பயன்படுத்துதலோ ஆகாது என வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும் எனவும் வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

2.4 வங்கியின் வர்த்தகக் குறிகள்: வாடிக்கையாளர் ஏதேனும் நோக்கத்துக்காக வங்கியின் எழுத்திலான முன் சம்மதமின்றி சேவைகள் அத்துடன் / அல்லது முறைமை தொடர்பாக வங்கியினால் அல்லது அதன் எவையேனும் தொடர்பான கம்பெனிகளினால் பயன்படுத்தப்படக்கூடிய அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட, பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத "NDB வங்கி", "Neos Corporate", அல்லது வேறு ஏதேனும் வர்த்தகக்குறி போன்ற வர்த்தகக்குறிகள் அல்லது குழப்பமாகவுள்ள வகையில் ஒத்ததாகவுள்ள ஏதேனும் வர்த்தகக்குறி அல்லது சின்னத்தைப் பயன்படுத்துதலாகாது.

2.5 உரிமம் அல்லது உப-உரிமம் எதுவும் இருத்தலாகாது: வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் சொந்தத் தொழில் நெறியின் போது மட்டுமே முறைமையையும் சேவைகளையும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் முறைமை, சேவைகள், பயனர் வழிகாட்டியை எவரேனும் ஆட்களுக்கு உரிமமளித்தலுமாகாது அல்லது உப உரிமமளித்தலும் ஆகாது அல்லது முறைமையில் உள்ள வங்கியின் புலமைச்சொத்து உரிமைகளுக்கு (அல்லது அத்தகைய உரிமைகளை வங்கி பெறுகின்ற எவரேனும் ஆளின் புலமைச்சொத்து உரிமைகளுக்கு) பங்கமாகின்ற எதனையும், செய்தலாகாது.

2.6 மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம்: வாடிக்கையாளர் முறைமையை, சேவைகளை, பயனர் வழிகாட்டியை அல்லது முறைமையினூடாக அறிவிக்கப்படும் தரவு அத்துடன் / அல்லது தகவலை அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள் தவிர்ந்த எவரேனும் ஆட்களுக்கு விநியோகித்தலோ அல்லது கிடைக்கக்கூடியதாக்குதலோ ஆகாது.

2.7 பதிப்புரிமை பற்றிய அறிவித்தல்: வாடிக்கையாளர், வங்கியினால் அல்லது அதன் சார்பாக வழங்கப்பட்ட ஏதேனும் பொருளில் அடங்கியுள்ள அல்லது உள்ளடக்கப்பட்ட ஏதேனும் பதிப்புரிமை பற்றிய அறிவித்தல், அல்லது வேறு உரிமையாளர் அல்லது மட்டுப்படுத்தும்

அறிவித்தலை அல்லது குறிவிளக்கத்தை அல்லது அதன் ஏதேனும் பிரதியை அகற்றுதலோ, மாற்றுதலோ தெளிவற்றதாக்குதலோ அல்லது வேறு வகையில் திரிபுபடுத்துதலோ ஆகாது.

2.8 அரசாங்க மற்றும் ஒழுங்குபடுத்தும் உரிமங்கள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சம்மதங்கள்: வாடிக்கையாளர், வரையறையின்றி தகவல்களின் மறைகுறியாக்கம் மற்றும் செலாவணிக் கட்டுப்பாடுகள் தொடர்பானவை உட்பட முறைமை மற்றும் சேவைகள் தொடர்பான எல்லா ஏற்புடையனவான சட்டங்கள் மற்றும் பணிப்புரைகளின் கீழும் தேவைப்படுத்தப்பட்ட எல்லா தோதான அரசாங்க, ஒழுங்குபடுத்தும் மற்றும் வேறு ஏற்புடையனவான உரிமங்கள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சம்மதங்களைப் பெற்றுப் பேணுதல் வேண்டும்.

**3. கட்டணங்கள்**

3.1 முறைமையைப் பயன்படுத்துவதற்கான உரிமைக்கான கட்டணங்கள்: இந்நியதி நிபந்தனைகளின் வாசகம் 2 (முறைமையைப் பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் புலமைச் சொத்து உரிமைகள்) இல் குறிப்பீடு செய்யப்பட்ட முறைமையைப் பயன்படுத்துவதற்கான உரிமை இந்நியதி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டவாறு வாடிக்கையாளரினால் வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய மாதாந்த வாடகையொன்றுக்கு அமைந்ததாகும்.

3.2 சேவை மற்றும் கொடுக்கல்வாங்கல் கட்டணங்கள்: சேவைகள் மற்றும் வேறு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக வங்கியினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் சேவை மட்ட நியமங்களுக்கு இணங்க அச்சேவைகளுக்கு அல்லது வேறு கொடுக்கல்வாங்கல்களுக்கான கட்டணங்களையும் வேறு விதிப்பனவுகளையும் வாடிக்கையாளர் வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். வங்கியானது அதன் தனித் தற்றுணிபில் அறிவித்தல் வழங்குவதன் மூலம் ஏதேனும் சேவை மற்றும் கொடுக்கல்வாங்கலை அதிகரிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய அறிவித்தல் வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

3.3 பிடித்துவைத்தல்கள் மற்றும் விற்பனை வரியின் பின்னரான தேறிய கட்டணங்கள்: இந்நியதி நிபந்தனைகள், சேவைமட்ட நியமங்கள் மற்றும் கணக்கு பற்றிய பொறுப்பாணையின் கீழ் வாடிக்கையாளரினால் செலுத்தப்படத்தக்கதான எல்லாக் கட்டணங்களும், விதிப்பனவுகளும் மற்றும் வேறு தொகைகளும் எவையேனும் வரிகள் உட்பட ஏதேனும் வடிவத்திலான எவையேனும் கழிப்பனவுகள் அல்லது பிடித்துவைத்தல்களின் பின்னரான தேறிய பெறுமதியாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் ஏற்புடையதாகின்றவிடத்து இயைபான சட்டவாக்கத்தின் கீழ் விதிக்கப்பட்டவாறு கொடுப்பனவுக்குரிய திகதியில் வலுவிலுள்ள வீதத்தில் வாடிக்கையாளருக்கு விதிப்பனவு செய்யப்படவேண்டியதும் வாடிக்கையாளரினால் செலுத்தப்படவேண்டியதுமான எவையேனும் விற்பனை வரிகள் (உதாரணமாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அல்லது பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி) நீங்கலாகவிருக்கும். வாடிக்கையாளர் அல்லது வேறு எவரேனும் ஆள் ஏதேனும் நேரத்தில்

இந்நியதிநிபந்தனைகளின்கீழ் வாடிக்கையாளரினால் செலுத்தப்படும் அல்லது செலுத்தப்படவேண்டிய அல்லது வாடிக்கையாளரிடமிருந்து பெறப்படும் அல்லது பெறப்படவேண்டிய ஏதேனும் பணத்தொகையிலிருந்து ஏதேனும் தொகையை கழிப்பனவு செய்தால் அல்லது பிடித்துவைத்தால், வங்கியானது (அதன் சொந்த ஒட்டுமொத்த தேறிய வருமானத்தின் மீதான வரி தவிர்ந்த ஏதேனும் பொறுப்பிலிருந்து விடுபட்டதாக) அத்தகைய கழிப்பனவு அல்லது பிடித்துவைத்தல் தேவைப்பட்டிராதிருப்பின் அல்லது செய்யப்பட்டிராதிருப்பின் அது பெற்று அவ்வாறு வைத்திருக்கக்கூடிய பணத்தொகைக்குச் சமமான அப்பணத்தொகையை அது பெற்று வைத்திருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய மேலதிகத் தொகையை வாடிக்கையாளர் அதே நேரத்தில் செலுத்துதல் வேண்டும்.

3.4 கணக்குக்கு பற்றுவைத்தல் மற்றும் எதிரீடு செய்தல்

3.4.1 எவையேனும் நாணயங்கள் குறிக்கப்படுகின்ற நாணயத்தைப் பொருட்படுத்தாமல் வருமதியாகவும் செலுத்தப்படத்தக்கதாகவும் இருப்பினுஞ்சரி அல்லது அல்லாவிடினுஞ்சரி, வங்கியினால் வாடிக்கையாளருக்கு சேர்பெறுமதியாகவுள்ள அத்தகைய கடன்களுக்கு எதிராக, வருமதியாகவும் செலுத்தப்படத்தக்கதாகவும் இருப்பினுஞ்சரி அல்லது அல்லாவிடினுஞ்சரி மற்றும் எதிர்பாராததாகவிருப்பினும் சரி அல்லது அல்லாவிடினுஞ்சரி வங்கியினால் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்படத்தக்க எல்லா மற்றும் எவையேனும் கடன்களை எதிரீடுசெய்வதற்கு வாடிக்கையாளருக்கான அறிவித்தலின்றி, எல்லா நேரங்களிலும் காலத்துக்குக்காலம் வங்கிக்கு, வங்கியின் தொடர்பு வங்கிகள் மற்றும் முகவர்களுக்கு இல்லாதொழிக்கமுடியாத வகையில் வாடிக்கையாளர் அதிகாரமளிக்கின்றார். இவ்வாசகத்தின் கீழ் வங்கியின் உரிமைகள், வங்கியானது வேறு எவையேனும் நியதி நிபந்தனைகளின்கீழ் அல்லது வேறுவகையாக கொண்டிருக்கக்கூடிய வேறு எவையேனும் அத்தகைய உரிமைகளுக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைத் தரம் குறைத்தலாகாது.

3.4.2 வாடிக்கையாளர், Neos Corporate இனைப் பயன்படுத்துதல் தொடர்பான வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்படுகின்ற எவ்வகையினவுமான கட்டணங்கள் (3.1), சேவை மற்றும் கொடுக்கல்வாங்கல் கட்டணங்களை (3.2) வாடிக்கையாளரின் கணக்குக்கு / கணக்குகளுக்கு பற்றுவைப்பதற்கு வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

**4. ஒப்படைப்பு மற்றும் நிறுவுகை**

முறைமையை ஒப்படைப்பதற்கு முன்னர், வாடிக்கையாளர், அவசியமான அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள் மற்றும் அதிகாரமளிப்பவரின் அடையாளம் பற்றிய விபரங்களை உள்ளடக்கவேண்டிய விண்ணப்பமொன்றை வங்கிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். வங்கியானது முறைமை மற்றும் பயனர் வழிகாட்டியை வாடிக்கையாளருக்கு ஒப்படைத்தல் அல்லது

ஒப்படைப்பதனைச் செய்வித்தல் வேண்டும். வாடிக்கையாளர், Neos Corporate இன் சீர்மை வள இடப்படுத்தி (URL) முகவரியை வாடிக்கையாளரின் குறிக்கப்பட்ட சாதனத்தில் விருப்பத்துக்குரியது என்ற வடிவத்தில் அல்லது தொடக்கப்பக்கமொன்றாக சேமித்தல் வேண்டும்.

**5.பயிற்சி மற்றும் ஆதரவு**

வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையில் உடன்பட்டுக்கொள்ளப்படுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளில் மேல் வங்கியினாலும் வாடிக்கையாளரினாலும் பரஸ்பரம் தீர்மானிக்கப்படுகின்றவாறு மெய்நிகர் அடிப்படையில் அல்லது தளத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கான பயிற்சியை வங்கி வழங்குதல் வேண்டும்.

**6. தனிப்பட்ட தரவுகள்**

ஏதேனும் சட்டத்தினால் அல்லது பணிப்புரையினால் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, முறைமை, சேவைகள் தொடர்பாகவிருப்பினுஞ்சரி அல்லது வேறுவகையாக வங்கியினால் அல்லது அதன் ஊழியர்கள் எவரினாலும் தனிப்பட்ட தரவுகளின் ஏதேனும் பயன்பாடு அல்லது அவற்றைப் பொருத்திப்பார்ப்பதற்கான மற்றும் தனிப்பட்ட தரவுகளின் சர்வதேச பரிமாற்றத்துக்கான இயைபான எல்லா அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள், பணம் பெறுனர்கள், வேறு மூன்றாம் திறத்தவர்கள், அசராங்க முகவராண்மைகள் மற்றும் ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளிடமிருந்து எழுத்திலான சம்மதம் மற்றும் வேறு எல்லா அவசியமான அங்கீகாரங்களையும், உரிமங்களையும் மற்றும் அனுமதிப்பத்திரங்களையும் பெறுதல் வேண்டும் (மற்றும் பேணுதல் வேண்டும்). வாடிக்கையாளர், கோரிக்கையின் மேல் வங்கி நியாயமானமுறையில் தேவைப்படுத்துகின்றவாறு அத்தகைய சம்மதங்கள், அங்கீகாரங்கள், உரிமங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களின் மூலப்பிரதிகளை, பிரதிகளை அல்லது வேறு சான்றை வங்கிக்கு வழங்குதல் வேண்டும்.

**7. பாதுகாப்புக் கடமைகள்**

7.1 கூட்டாண்மை நிறுவனத்தினால் கோரப்படும் ஒவ்வொரு பயனருக்கும் / பயனர்களுக்கும் வங்கியினால் பயனர் ID / ID கள் உருவாக்கப்படுதல் வேண்டும். பயனர் ID / ID கள் மற்றும் கடவுச்சொல் / கடவுச்சொற்கள் Neos Corporate விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பயனர் / பயனர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு / முகவரிகளுக்கு மின்னஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். பயனர் அணுகுகை, இடமாற்றம், பதவிவிலகுகை போன்ற காரணங்களுக்காக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக எவரேனும் பயனர் / பயனர்களிடமிருந்து நீக்கப்படுகின்றபட்சத்தில், அது பற்றி வங்கிக்கு முற்கூட்டியே அறிவிப்பது கூட்டாண்மை நிறுவன வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.

7.2 வாடிக்கையாளரின் பாதுகாப்புக் கடப்பாடுகள்: வாடிக்கையாளர், திருட்டு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள் தவிர்ந்த எவரேனும் ஆட்களினாலான அணுகுகையிலிருந்து

முறைமை, குறிக்கப்பட்ட சாதனம், பயனர் ID, கடவுச்சொல் மற்றும் பயனர் வழிகாட்டியைப் பாதுகாப்பதற்கான தோதான பாதுகாப்பு வழிமுறைகளை எடுப்பதற்கும் வாசகம் 6 (தனிப்பட்ட தரவுகள்) உடன் அவரது இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்துவதற்கும் வாடிக்கையாளர் உடன்படுகின்றார் என்பதுடன் மேலதிகமாக சேவை மட்ட நியமங்கள், பயனர் வழிகாட்டியுடன் சேர்த்தும் காலத்துக்குக்காலம் வங்கியினால் வாடிக்கையாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்படுகின்றவாறும் இந்நியதி நிபந்தனைகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

7.3 வாடிக்கையாளரின் பாதுகாப்புக் கடப்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

7.3.1 எல்லா UB சாவிகளும் வழங்கப்படுவதன்மேல் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுகின்றன என வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

7.3.2 ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பயனருக்கும் UB சாவி வழங்கப்படுவதில்லை எனவும் அதற்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கு மட்டுமே UB சாவிகள் வழங்கப்படுகின்றன எனவும் வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்:

7.3.3 தற்காலிக கடவுச்சொல், ஒருமுறை மாத்திரமான கடவுச்சொல் (OTP) மற்றும் அதிகாரவளிப்புக் கடவுச்சொல் ஒவ்வொன்றையும் வாடிக்கையாளரின் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் மட்டுமே அறிகின்றார் எனவும் ஏதேனும் எழுத்து வடிவத்தில் அவை பேணப்படவில்லை எனவும் வாடிக்கையாளர் உறுதிப்படுத்துல் வேண்டும்;

7.3.4 அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கு வழங்கப்பட்ட எவையேனும் UB சாவிகள் மற்றும் முறைமையை அனுகுவதற்கு அவர்களினால் பயன்படுத்தப்படும் தற்காலிக கடவுச்சொல், ஒரு முறை மாத்திரமான கடவுச்சொல் (OTP) என்பவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான எல்லா நியாயமான வழிமுறைகளையும் அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள் எடுக்கின்றனர் என வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

7.3.5 குறிக்கப்பட்ட சாதனங்கள் பொருத்தமான பாதுகாப்பான சூழல் ஒன்றில் பேணப்படுகின்றன எனவும் பொதுமக்களுக்கு அல்லது பொது இடமொன்றில் அணுகப்படக்கூடியவாறாக இல்லை எனவும் வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

7.3.6 குறிக்கப்பட்ட சாதனம்: Neos Corporate இனைப் பயன்படுத்துதவதற்கு முறையான தொழிற்பாட்டு நிலைமையிலும் குறிக்கப்பட்ட சாதனத்துக்கான அல்லது Neos Corporate இற்கான வன்மமான அச்சுறுத்தலுக்கெதிராக போதிய பாதுகாப்பு வழிமுறைகளுடனும்

குறிக்கப்பட்ட சாதனத்தைப் பெற்றுப் பேணுவதற்கு வாடிக்கையாளர் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன் குறைபாடுள்ள அல்லது பாதுகாப்பற்ற சாதனத்தைப் பயன்படுத்தி அல்லது Neos Corporate இனை பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் முறை மூலம் Neos Corporate இனை அணுகுதலும் ஆகாது.

7.3.7 கடவுச்சொல்லை மாற்றுதல்: Neos Corporate இற்கு முதலாவது தடவை அணுகுவதன் உடன் அடுத்துப்பின்னரும் அதன் பின்னர் தொண்ணூறு (90) நாட் காலப்பகுதியொன்றாகவுள்ள கிரமமான இடைவெளிகளிலும் வாடிக்கையாளருக்கு அல்லது வாடிக்கையாளரினால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கு, முகவர்களுக்கு அத்துடன் / அல்லது வேறு மூன்றாம் திறத்தவர்களுக்கு குறித்தளிக்கப்பட்ட கடவுச்சொல்லை மாற்றுவதற்கான பொறுப்பை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

7.4 பாதுகாப்பை மீறுதல்: பின்வருமாறு நம்புவதற்கான எவையேனும் ஏதுக்களை வாடிக்கையாளர் கொண்டிருப்பின் அதுபற்றி உடனடியாக தொலைபேசி மூலமும் அதன்பின்னர் மின்னஞ்சல் மூலமும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படும் கடிதத்தின் மூலமும் வாடிக்கையாளர் வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்:

7.4.1 முறைமை, UB சாவி, தற்காலிக கடவுச்சொல், ஒரு முறை மாத்திரமான கடவுச்சொல் (OTP) அல்லது வேறு மெய்யுறுதிப்படுத்தும் நடவடிக்கைமுறை ஆபத்துக்குட்படுத்தப்பட்டுள்ளது அல்லது ஆபத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கக்கூடும், திரிபுபடுத்தப்பட்டுள்ளது அல்லது திரிபுபடுத்தப்பட்டிருக்கக்கூடும், திருடப்பட்டுள்ளது அல்லது திருடப்பட்டிருக்கக்கூடும், இடந்தவறி வைக்கப்பட்டுள்ளது அல்லது இடந்தவறி வைக்கப்பட்டிருக்கக்கூடும், காணாமல் போயுள்ளது அல்லது காணாமல் போயிருக்கக்கூடும் அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடும் அல்லது அதுபற்றிய அறிவு இயைபான அதிகாரமளிக்கப்பட்ட பயனர் அல்லது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட ஊழியர்களுள் ஒருவர் தவிர்ந்த எவரேனும் ஆளினால் கொள்ளப்பட்டுள்ளது அல்லது கொள்ளப்பட்டிருக்கக்கூடும் எனவும்; எவையேனும் அறிவுறுத்தல்கள் அல்லது நிதிசார் தகவல்கள் அல்லது அறிவுறுத்தல் ஒன்றைப் பின்பற்றிச் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான ஏதேனும் தவறுகை அல்லது அவற்றைப் பெற்றுக்கொள்வதிலான தாமதம் உள்ளது எனவும்: அல்லது ஒரு கணக்கு அறிவுறுத்தல் அல்லது கொடுப்பனவு தொடர்பான எவையேனும் நிதிசார் தகவல்களை, தகவல்களை அனுப்புவதில் அல்லது பெற்றுக்கொள்வதில் அல்லது அவற்றைப் பயனுறுத்துவதில் ஏதேனும் அறியப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட பிழை அல்லது மோசடி அல்லது ஏதேனும் அறிவுறுத்தலின் ஏதேனும் செய்நிரலாக்கப் பிழை அல்லது குறைபாடு அல்லது அழிவு அல்லது இந்நியதிநிபந்தனைகளில் உள்ள எவையேனும் பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஏதேனும் மீறுகை அல்லது சாத்தியமான மீறுகை உள்ளது எனவும்

7.4.2 மேற்கூறப்பட்டவாறு 7.2.1 இல் உள்ள நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று இடம்பெறுவதன் மேல், வாடிக்கையாளர், பரிகார வழிமுறைகளை எடுப்பதில் வங்கியின் அறிவுறுத்தல்களுடன் இணங்கியொழுகுவதற்கு தனது முழு முயற்சியை எடுத்தல் வேண்டும் என்பதுடன் அவசியமாயின், குறிக்கப்பட்ட சாதனம் வைத்திருக்கப்படுகின்ற இடத்துக்கான அணுகுகையை வங்கியின் ஊழியர்கள், குறிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் கீழ் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்குதலும் வேண்டும். ஒரு UB சாவி அல்லது தற்காலிக கடவுச்சொல், ஒரு முறை மாத்திரமான கடவுச்சொல் (OTP) சம்பந்தமான பாதுகாப்பின் மீறுகையொன்று பற்றி அறியவந்தவுடன், வாடிக்கையாளர் அத்தகைய UB சாவி, தற்காலிக கடவுச்சொல் அல்லது ஒரு முறை மாத்திரமான கடவுச்சொல் (OTP) முறைமையிலிருந்து நீக்குதல் வேண்டும் என்பதுடன் வங்கியானது முறையான அறிவித்தலைப் பெறுவதன் மேல், முறைமையானது அந்த UB சாவி, கடவுச்சொல் அல்லது ஒரு முறை மாத்திரமான கடவுச்சொல் (OTP) இனால் அணுகப்படமுடியாது என உறுதிப்படுத்துவதற்கான நியாயமான நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும். வாடிக்கையாளர் அத்தகைய மீறுகையிலிருந்து எழுகின்ற அல்லது அது தொடர்பாக இழக்கப்பட்ட அல்லது உரிமைகோரப்பட்ட ஏதேனும் தொகைக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

7.5 பயனர் வழிகாட்டி: அதிகாரமளிக்கப்பட்ட எல்லாப் பயனர்களும், இந்நியதி நிபந்தனைகள் மற்றும் பயனர் வழிகாட்டியில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் உட்படவும் அவற்றுக்கு வரையறையின்றியும் இந்நியதி நிபந்தனைகள் மற்றும் பயனர் வழிகாட்டியை மீளாய்வு செய்து, விளங்கிக்கொண்டு அவற்றுடன் இணங்கியொழுகுகின்றனர் என வாடிக்கையாளர் உதிப்படுத்துதல் வேண்டும்.

7.6 வைரஸ் மாசுபாடு: குறிக்கப்பட்ட சாதனங்கள் வைரஸ் மாசுபாடு மற்றும் வேறு அழிவுக்குட்படுத்துகின்ற சாதனங்கள் மற்றும் குறியீட்டிலிருந்து விடுபட்டவை எனவும் முறைமை அல்லது வங்கியின் கணினிச் சாதனம் வன்பொருள் அல்லது மென்பொருளுக்கு வைரசை கடத்துவதில்லை எனவும் உறுதிப்படுத்துவதற்கான மிகச்சிறந்த முயற்சிகளை வாடிக்கையாளர் எடுத்தல் வேண்டும்.

## 8. **அதிகாரவளிப்பு மற்றும் அறிவுறுத்தல்களை நிறைவேற்றுதல்**

8.1 அறிவுறுத்தல்கள் பொதுவாக:

8.1.1 அறிவுறுத்தலொன்றின் பெறுகையொன்று முறைமையினால் ஒப்புக்கொள்ளப்படும் போது மட்டுமே அத்தகைய அறிவுறுத்தலை வங்கி பெற்றுக்கொண்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், இவ்வாசகத்தில் உள்ள எதுவும் வாசகம் 8.7 (அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதற்குத் தவறுதல்) இன் கீழ் அறிவுறுத்தல்களை நிறைவேற்றாமல் இருப்பதற்கான வங்கியின் தற்றுணிபைப் பாதித்தலாகாது; அத்துடன்

8.1.2 அறிவுறுத்தல்களின் உண்மைத்தன்மை மற்றும் செம்மையை சரிபார்ப்பதற்காக காலத்துக்குக்காலம் வங்கி தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய காரியங்களை வங்கி செய்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆவணங்களை அத்துடன் / அல்லது தகவல்களை வங்கிக்கு வழங்குதலும் வேண்டும்.

8.2 முறைமையின் தவறுகை விடயத்திலான அறிவுறுத்தல்கள்: முறைமையின் தவறுகையொன்றின் விடயத்தில், வாடிக்கையாளர் வங்கிக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு ஏதேனும் வடிவத்தில் அறிவுறுத்தல்களை வங்கிக்கு வழங்கலாம் என்பதுடன் வங்கியானது அதன் தனித்தற்றுணிபில் அத்தகைய அறிவுறுத்தல்களை ஏற்று பயனுறுத்தலாம்.

8.3 எழுத்திலான கையொப்பம்: வாடிக்கையாளரும் வங்கியும், அறிவுறுத்தல்களை தொடங்கலாம் என எழுத்தில் உடன்பட்டுக்கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கான மாதிரி கையொப்பங்களை வாடிக்கையாளர் வழங்குதல் வேண்டும் என்பதுடன் வங்கியானது தொடர்புபட்ட அறிவுறுத்தலொன்றின் நம்பகத்தன்மையின் போதிய எண்பிப்பாக அம்மாதிரிக் கையொப்பங்களுக்கு இசைந்தொழுகுவதாகத் தோன்றுகின்ற கையொப்பங்கள் மீது முழுமையாக நம்பியிருக்கலாம்.

8.4 UB சாவி கையொப்பம், சொப்ட் டோக்கன், SMS OTP, மின்னஞ்சல் OTP மற்றும் கொடுக்கல்வாங்கல் கடவுச்சொல்: வங்கியானது தொடர்புபட்ட அறிவுறுத்தலொன்றின் நம்பகத்தன்மையின் போதிய எண்பிப்பாக ஏதேனும் UB சாவி / கொடுக்கல்வாங்கல் கடவுச்சொல்லினால் சமர்ப்பிக்கப்படும் எண்ணிம கையொப்பத்தின் மீது முழுமையாக நம்பியிருக்கலாம். கடவுச்சொற்கள் இணையவழிக் கொடுக்கல்வாங்கல் அங்கீகாரத்துக்காக வாடிக்கையாளரின் அதிகாரமளிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றன என்பதுடன் அத்தகைய வாடிக்கையாளரின் அதிகாரமளிக்கப்பட்டவர்கள் வங்கிக்கான முன்னறிவித்தலுடன் ஏதேனும் வழங்கப்பட்ட நேரத்தில் UB சாவி கையொப்பம், சொப்ட் டோக்கன், SMS OTP, மின்னஞ்சல் OTP அல்லது கொடுக்கல்வாங்கல் கடவுச்சொல் முறையை பயன்படுத்தமுடியும்.

8.5 அறிவுறுத்தல்கள் மீது வங்கி நம்பியிருத்தல்: மேலே 8.1, 8.2 மற்றும் 8.3 ஆகிய வாசகங்களில் தரப்பட்ட ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, இந்நியதி நிபந்தனைகளில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில், முறைமையின் ஊடாக வங்கியை வந்தடைகின்ற எவையேனும் அறிவுறுத்தல்கள் அல்லது வேறு அறிவித்தல்களின் நம்பகத்தன்மை மீதும் அவற்றிற்கான உரிய அதிகாரவளிப்பின் மீதும் வங்கி முழுமையாக நம்பியிருக்கலாம் என்பதுடன் வங்கியானது அவ்வறிவுறுத்தல்களை அத்துடன் / அல்லது வேறு அறிவித்தல்களை நிறைவேற்றுவதற்கு வாடிக்கையாளரினால் உரியமுறையில் அதிகாரமளிக்கவும்படுகின்றது.

8.6 நிறைவுசெய்யப்படாத அறிவுறுத்தல்கள்: நிறைவுசெய்யப்படாத அறிவுறுத்தல்கள், வங்கியின் நியாயமான அபிப்பிராயத்தில் அவற்றின் உளக்கருத்தை உய்த்தறிவதற்கு வங்கிக்குப் போதிய தகவலைக் கொண்டிருக்கின்றவிடத்து அவற்றின்மீது வங்கி செயலாற்றலாம்.

8.7 இடையீட்டாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் வேறு தொடர்பாடல் முறைமைகளை வங்கி பயன்படுத்துதல்: வங்கியானது, இந்நியதி நிபந்தனைகளின்கீழ் மற்றும் வாடிக்கையாளருடனான வேறு எவையேனும் நியதி நிபந்தனைகளின்கீழ் அறிவுறுத்தல்களைப் பயனுறுத்துவதில், சேவைகளை வழங்குவதில் மற்றும் வேறுவகையாக அதன் கடப்பாடுகளைப் புரிவதில், பிரதிநிதிகள், இடையீட்டாளர்கள் மற்றும் வேறு மூன்றாம் திறத்தவர்களைப் பயன்படுத்தலாம் என்பதுடன் தொடர்பாடல்கள் மற்றும் தரவு அனுப்புகை முறைமைகள் அத்துடன் சேவை வழங்குநர்களைத் தெரிவு செய்து பயன்படுத்தலாம். இவ்வாசகத்தின் கீழான வங்கியின் உரிமைகள், வேறு எவையேனும் நியதி நிபந்தனைகளின்கீழ் அல்லது வேறு வகையாக வங்கி கொண்டிருக்கக்கூடிய அத்தகைய வேறு எவையேனும் உரிமைகளுக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைத் தரம் குறைப்பதாக இருத்தலாகாது.

8.8 அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதற்குத் தவறுதல்: நியாயமானமுறையில் செயலாற்றும் வங்கியானது, அது அவசியமானது அல்லது உகந்தது எனக் கருதுகின்ற சூழ்நிலைகளில், அறிவுறுத்தல்களுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் நிறைவேற்றுதலாகாது அல்லது அவற்றின் மீது வேறுவகையாக செயலாற்றுதல் ஆகாது, அச்சந்தர்ப்பத்தில் வங்கியானது பதிவஞ்சல் கடிதம் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி மூலம் செயல்முறைக்கு உகந்தவாறு விரைவாக வாடிக்கையாளருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அறிவித்தல் தொலைபேசி மூலம் வழங்கப்படின், சொல்லப்பட்ட அறிவித்தலை மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். (மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்துவதற்குத் தவறுவதானது தொலைபேசி மூலமான அறிவித்தலின் செல்லுபடியாந்தன்மையை பாதித்தலாகாது) ஆயின், எவ்வாறாயினும் வங்கியானது (அவ்வாறு செய்வது நியாயமான முறையில் செயல்முறைக்கு உகந்ததாகவிருக்கும்போது) முன்னறிவித்தலை அல்லது (அதன் பின்னர் நியாயமானமுறையில் செயல்முறைக்கு உகந்தவாறு விரைவாக) அவ்வாறு செய்வதற்கான வங்கியின் காரணங்கள் பற்றிய அடுத்துப்பின்னரான அறிவித்தலை வாடிக்கையாளருக்கு வழங்குதல் வேண்டும்.

8.9 வெளிநாட்டுச்செலாவணி: அறிவுறுத்தல் அல்லது வாசகம் 3.4 இன் கீழான ஏதேனும் கணக்குக்கு பற்று வைத்தல் அல்லது எதிரீடுசெய்தல் (கணக்குக்கு பற்றுவைத்தல் மற்றும் எதிரீடுசெய்தல்) மீது நிதிகளை ஒரு நாணயத்திலிருந்து இன்னொரு நாணயத்துக்கு மாற்றுவதனை தேவைப்படுத்துகின்றவிடத்து, வங்கியானது வங்கியின் அப்போது நிலவுகின்ற தள செலாவணி வீதத்தில் அம்மாற்றுதலை பயனுறுத்துதல் வேண்டும்.

9. **கணக்குகள்**

9.1 வங்கியின் கணக்குகள் முடிவானவையாகும்: வங்கியின் கணக்குகளுக்குச் செய்யப்படும் பதிவுகளும் வங்கியின் வழமையான செயல்முறைக்கு இணங்கப் பேணப்படும் பதிவேடுகளும் வெளிப்படையான பிழையொன்று இல்லாதபோது அறிவுறுத்தல்கள், கொடுப்பனவுகள் முறை, கணக்கு மீதிகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அவற்றின் முறையான ஆக்கக்கூறுகள் அத்துடன் அவை அனுப்பப்பட்ட, பெறப்பட்ட அல்லது பயனுறுத்தப்பட்ட நேரங்கள் பற்றிய முடிவான சான்றாகவிருத்தல் வேண்டும். அத்தகைய கணக்குகள் மற்றும் பதிவேடுகள் மூலப்பிரதிகளாக இல்லை, எழுதப்பட்டனவாக இல்லை, செவிவழியானவையாக உள்ளன அத்துடன் / அல்லது கணினி ஒன்றினால் தோற்றுவிக்கப்படுகின்றன என்ற காரணத்துக்காக மட்டும் சட்டவழக்கு நடவடிக்கைகளில் சான்றாக அவற்றின் ஏல்தகவுடைமையை ஆட்சேபிக்காமல் இருப்பதற்கு வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

9.2 வங்கியின் தரவுத்தளத்திலிருந்தான தகவல்கள்: வங்கியின் தரவுத்தளத்திலிருந்து முறைமையினூடாக வாடிக்கையாளர் பெறுகின்ற ஏதேனும் நிதிசார் தகவல் அல்லது வேறு தகவல் அறிவுறுத்தல்களைப் பயனுறுத்தும் நோக்கத்துக்காக மட்டும் என வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கின்றார். வாடிக்கையாளர் அத்தகவலுக்கு எவையேனும் உடைமை உரிமைகளைக் கொள்ளுதலாகாது என்பதுடன் வேறு ஏதேனும் நோக்கத்துக்காக அத்தகவலை பயன்படுத்துவதற்கான அல்லது பிரதிசெய்வதற்கான உரிமையை கொண்டிருத்தலுமாகாது.

10 **முறைமையின் செயல்நிறைவேற்றம், பேணுகை மற்றும் குறிக்கப்பட்ட தளத்துக்கான அணுகுகை**

10.1 பயன்படுத்துவதற்கான உரிமையை அளித்தல்: வாசகம் 2.1 (பயன்பாட்டு உரிமைக்கான கட்டணம்) இல் தரப்பட்டவாறு முறைமையைப் பயன்படுத்துவதற்கான உரிமையை வாடிக்கையாளருக்கு அளிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது என அது நம்புறுதியளிக்கின்றது.

10.2 செயல்நிறைவேற்ற நம்புறுதியெதுவும் இருத்தலாகாது: முறைமை, சேவைகள் அல்லது பயனர் வழிகாட்டி பிழையற்றதாக உள்ளன அல்லது பிழையற்றதாக இருக்கும், பழுதடையாமல் இருக்கும் அல்லது வைரஸ் மாசுபாடு அற்றதாக இருக்கும் அல்லது அவை நிறைவானவை அல்லது இற்றைப்படுத்தப்பட்டவை அல்லது வாடிக்கையாளர் எதிர்பார்க்கின்ற

குறிப்பிட்ட நோக்கங்களுக்கு அல்லது விளைவுகளுக்கு பொருத்தமாக இருக்கும் என அல்லது முறைமையின் பயன்பாடு இடையீடு செய்யப்படாது என நம்புறுதியளிக்காது. வாடிக்கையாளர், வரையறையின்றி, சொத்தாண்மை, நோக்கத்துக்கான தகுதி மற்றும் செயல்நிறைவேற்றம் உட்பட இந்நியதி நிபந்தனைகளில் ஏற்பாடுசெய்யப்படாத எவையேனும் நம்புறுதிகளை இத்தால் விட்டுக்கொடுக்கின்றார்.

10.3 பேணுகை: வங்கியானது, சேவை மட்ட நியமங்கள் மற்றும் பயனர் வழிகாட்டியுடன் சேர்த்து இந்நியதி நிபந்தனைகளில் நோக்காகக்கொள்ளப்பட்ட செயல்நிறைவேற்ற மட்டங்களுடன் கணிசமானளவு அது மற்றும் எவையேனும் சேவைகள் இணங்கியொழுகுகின்றன என உறுதிப்படுத்தும் வகையில் (அவசியமேற்படின் முறைமையின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் தொழிற்பாட்டை இடையீடு செய்தல் அல்லது இடைநிறுத்துதல் உட்பட) முறைமையை இற்றைப்படுத்துவதற்கும் பேணுவதற்குமான எல்லா நியாயமான வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும். அத்தகைய இற்றைப்படுத்தல் மற்றும் பேணுகையின் போது வாடிக்கையாளர் வங்கிக்கு முழுமையாக ஒத்துழைத்தல் வேண்டும் என்பதுடன் அது பற்றிய நேரம் வங்கியின் தனித் தற்றுணிபில் இருத்தல் வேண்டும்.

10.4 தகவல்களைப் பதிவதற்கான வங்கியின் பொறுப்பு: வங்கியானது, அவசியமேற்படின் வாடிக்கையாளரின் பதிவேடுகளைப் பேணுவதற்கும் மீள நிலைப்படுத்துவதற்கும் வாடிக்கையாளரை இயலச் செய்வதற்கு அவருக்கான எல்லா நியாயமான உதவிகளையும் வழங்குவதாக இருப்பினும், வாடிக்கையாளரினால் முறைமைக்கு உள்ளீடுசெய்யப்படுகின்ற அல்லது அதனூடாக அனுப்பப்படுகின்ற எவையேனும் தகவல்களை அல்லது தரவுகளை பதிவதற்கும் பாதுகாப்பாக சேமிப்பதற்கும் வாடிக்கையாளர் பொறுப்பாதல் வேண்டும்.

10.5 குறிக்கப்பட்ட சாதனத்துக்கான அணுகுகை: இந்நியதி நிபந்தனைகளின் கீழும் சேவை மட்ட நியமங்களின் கீழும் வங்கியின் கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு வங்கியை இயலச்செய்யும் நோக்கங்களுக்காக (குறிக்கப்பட்ட சாதனத்துக்கான நியாயமான அணுகுகையை வழங்குதல் உட்பட) நியாயமான முறையில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வசதிகளையும் தகவல்களையும் வங்கியின் ஊழியர்களுக்கும் குறிக்கப்பட்ட முகவர்களுக்கும் வாடிக்கையாளர் வழங்குதல் வேண்டும்.

**11. இரகசியத்தன்மை**

11.1 இரகசியத்தன்மை பற்றிய பொறுப்பேற்பு: வாசகம் 11.2 (தவிர்ப்புக்கள்) இற்கு அமைய, அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள், எல்லா நேரங்களிலும் இந்நியதி நிபந்தனைகள் தொடர்பாக காலத்துக்குக்காலம் வங்கியினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் முறைமை, பயனர் வழிகாட்டி, சேவைகள் மற்றும் அத்தகைய வேறு விடயங்களை கண்டிப்பாக இரகசியத்தன்மை வாய்ந்ததாக கையாளுதல் வேண்டும் என வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் உறுதிப்படுத்துவார் அத்துடன் அவற்றுள் எவற்றையும் அல்லது அதன் ஏதேனும்

பாகத்தை அல்லது அவை தொடர்பான எவையேனும் தகவல்களை அதிகாரமளிக்கப்பட்ட பயனர் தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்துதலோ, வெளிவிடுதலோ, அவற்றை இணைப்பிரதி எடுத்தலோ, பிரதி செய்தலோ, காட்சிப்படுத்துதலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது என்பதுடன் அவற்றை வங்கிக்காக கட்டுக்காப்பில் வைத்திருத்தலும் வேண்டும், அத்துடன் அவற்றைக் கையாளுவதில், பயன்படுத்துவதில் மற்றும் தேக்கிவைப்பதில் நியாயமான கவனிப்பைப் பிரயோகித்தல் வேண்டும்.

11.2 தவிர்ப்புக்கள் : வாசகம் 11.1 (இரகசியத்தன்மை பற்றிய பொறுப்பேற்பு) இன் ஏற்பாடுகள், வாடிக்கையாளர் பின்வருமாறு எண்பிக்கின்ற ஏதேனும் தகவலுக்கு ஏற்புடையனவாதலாகாது:

11.2.1 வாசகம் 11.1 (இரகசியத்தன்மை பற்றிய பொறுப்பேற்பு) இன் மீறுகையொன்றின் மூலம் தவிர்ந்த பொதுத்தளத்தில் உள்ளது அல்லது அதில் பிரவேசிக்கின்றது என;

11.2.2 ஏதேனும் சட்டத்தினால் அல்லது பணிப்புரையினால் வெளிவிடப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது என.

11..3 வங்கியினாலான வெளிவிடுகை: வாடிக்கையாளரின் எவையேனும் மற்றும் எல்லாத் தகவல்களையும், (வரையறையின்றி, சேவை மட்ட நியமங்கள் அத்துடன் / அல்லது சேவைகளிலிருந்து அல்லது அவை தொடர்பாக எழுகின்ற எவையேனும் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது விவகாரங்கள் உட்பட) வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையிலான எவையேனும் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது விவகாரங்கள் அல்லது கணக்கை (கணக்குகளை) எத்தகையதுமான ஏதேனும் நோக்கத்துக்கு பின்வருவனவற்றிற்கு வெளிவிடுவதற்கு, வங்கிக்கு அல்லது வங்கியின் எவரேனும் அலுவலருக்கு அல்லது தனது தன்மை அல்லது பதவி காரணமாக எவையேனும் வழிவகைகள் மூலம் வங்கியின் எவரேனும் வாடிக்கையாளரின் கணக்கு தொடர்பாக வங்கியின் பதிவேடுகளுக்கான அல்லது இடாப்பு அல்லது ஏதேனும் கடிதத்தொடர்பு அல்லது பொருளுக்கான அணுகுகையைக் கொண்டுள்ள எவரேனும் ஆளுக்கு இத்தால் வெளிப்படையாக வாடிக்கையாளர் அதிகாரமளிக்கின்றார்:

11.3.1 எங்கேனும் அமைந்துள்ள வங்கியின் கிளைகள், துணைநிலைக் கம்பெனிகள் அல்லது இணையாளர்கள் அல்லது இணைந்த கம்பெனிகள் எவற்றுக்கும்;

11.3.2 ஏதேனும் சட்டத்தினால் அல்லது பணிப்புரையினால் வெளிவிடுகை தேவைப்படுத்தப்படுகின்ற எல்லா அரசாங்க முகவராண்மைகளுக்கும், ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளுக்கும் அல்லது ஏதேனும் நியாயாதிக்கத்திலுள்ள நீதிமன்றங்களுக்கும்; அத்துடன்

11.3.3 (வரையறையின்றி, மேலே வாசகம் 8.7 இல் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் பிரதிநிதிகள், இடையீட்டாளர்கள் மற்றும் வேறு மூன்றாம் திறத்தவர்கள் அத்துடன்

எவையேனும் தொடர்பாடல்கள், தரவு அனுப்புகை முறைமைகள் மற்றும் சேவை வழங்குநர்கள் உட்பட) (இடையீட்டாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் வேறு தொடர்பாடல் முறைமைகளை வங்கி பயன்படுத்துதல்) வங்கிக்கு பணி புரிவதற்கு அல்லது சேவைகளை வழங்குவதற்கு உடன்பட்டுக்கொண்டுள்ள எவரேனும் உயர்தொழில்சார் ஆலோசகர்கள், முகவர்கள் அல்லது ஒப்பந்ததாரர்களுக்கு.

11.3.4 வங்கியானது, ஏற்புடையனவான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதி உளவறிதற் கூறுக்கு எவையேனும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களையும் விதிக்கப்பட்ட தொடக்க நிலைக்கு மேலான கொடுக்கல்வாங்கல்களையும் அறிக்கையிடுதல் வேண்டும். வங்கியானது, ஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்குவிதிக்கிணங்க ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்கு பொறுப்பாதலாகாது. எவ்வாறாயினும், அனுமதிக்கப்பட்ட தொடக்க நிலைக்கு மேலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் (ஏற்புடையவாறு) வங்கியின் முறைமையினால் தன்னிச்சையாக முடக்கப்படுதல் வேண்டும்.

இவ்வாசகத்தின் கீழான வங்கியின் உரிமைகள், வேறு எவையேனும் நியதி நிபந்தனைகளின்கீழ் அல்லது வேறு வகையாக வங்கி கொண்டிருக்கக்கூடிய அத்தகைய வேறு எவையேனும் உரிமைகளுக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைத் தரம் குறைப்பதாக இருத்தலாகாது.

11.4 வாடிக்கையாளரின் இரகசியத்தன்மைக் கடப்பாடுகளின் பயனுறுகை: ஏற்புடையனவான சட்டங்களினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு, இரகசியத்தன்மை பற்றிய வாடிக்கையாளரின் கடப்பாடுகள் சேவைகளின் காலாவதி அல்லது முடிவுறுத்துகை எவ்வாறிருப்பினும் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.

**12. பொறுப்பு மற்றும் நட்டோத்தரவாதம்**

12.1 வங்கியின் பொறுப்பு: இந்நியதி நிபந்தனைகள் வேறுவகையாக ஏற்பாடுசெய்கின்ற அளவுக்குத் தவிர, பின்வருவனவற்றினால் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுத்தப்படுகின்ற சேவைகள் மற்றும் சேவை மட்ட நியமங்கள், பயனர் வழிகாட்டி என்பவற்றிலிருந்து எவ்வகையினதுமான எழுகின்ற ஏதேனும் இழப்புக்காக அல்லது அது தொடர்பில் அல்லது முறைமை அல்லது சேவைகள் தொடர்பில் (கவனயீனத்துக்காக ஒப்பந்தத்தில் அல்லது தீங்கியலில் அல்லது வேறுவகையாக) வங்கி பொறுப்பாதல் ஆகாது.

12.1.1 இணையம், குறிக்கப்பட்ட சாதனம் அல்லது மென்பொருள் அல்லது ஏதேனும் தொலைபேசி இணைப்பு அல்லது வேறு தொடர்பாடல் அல்லது தரவு முறைமை, சேவை இணைப்பு, சேவை வழங்குநர் அல்லது சாதனத்தின் ஏதேனும் செயலறு நேரம் அல்லது கிடைக்கக்கூடியதாகவிராமை, தவறுகை, பிறழ்பயன்பாடு, அழிவு அல்லது இடையீடு;

12.1.2 வைரஸ் மாசுபாடு:

12.1.3 (அறிவுறுத்தல்களை அல்லது அறிவித்தல்களை அனுப்புதவற்கான ஏதேனும் தவறுகை உட்பட) எவையேனும் அறிவுறுத்தல்கள் அல்லது அறிவித்தல்கள் அல்லது கணக்குகள் தொடர்பான தகவல்கள் அல்லது நிதிசார் தகவல்களிலான ஏதேனும் தவறு, ஒவ்வாமை, தெளிவின்மை அல்லது அவற்றை வழங்குவதிலான தாமதம்;

12.1.4 கைத்தொழில் பிணக்குகள்;

12.1.5 பயனர் வழிகாட்டியில் குறித்துரைக்கப்பட்டவைக்கு முரணாக சூழல் அல்லது தொழிற்பாட்டு நிலைமைகளில் Neos Corporate அல்லது குறிக்கப்பட்ட சாதனத்தைப் பயன்படுத்துதல்;

12.1.6 வங்கியினால் ஏற்படுத்தப்படாத பௌதீக அல்லது மின்சேதம்;

12.1.7 அதிகாரமளிக்கப்படாத ஆளொருவரினால் முறைமை, சேவைகள் அல்லது வாடிக்கையாளர் தொடர்பான ஏதேனும் இரகசிய அல்லது வேறு தகவல், ஆவணம், அறிவுறுத்தல்கள், அறிவித்தல்கள், அறிக்கைகள் அல்லது செய்திகளின் ஏதேனும் பெறுகை;

12.1.8 வாசகம் 8.7 (அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதற்குத் தவறுதல்) இன் கீழ் வங்கியினால் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கை;

12.1.9 வாடிக்கையாளர், எவரேனும் தொடர்பாளர், இடையீட்டாளர், முகவர், பணம் செலுத்தும் வங்கி அல்லது எவரேனும் மூன்றாம் திறத்தவரினாலான ஏதேனும் செயல், செய்யாமை அல்லது தாமதம்;

12.1.10 அதிகாரமளிக்கப்படாத நோக்கங்களுக்காக அல்லது சேவை மட்ட நியமங்களுடன் சேர்த்து இந்நியதி நிபந்தனைகளுடன் ஒவ்வாத அல்லது அவற்றை மீறுகின்ற அல்லது மூன்றாம் திறத்தவரொருவரின் உரிமைகளை மீறுகின்ற முறையொன்றில் குறிக்கப்பட்ட சாதனத்தின், முறைமையின் அல்லது சேவைகளின் ஏதேனும் பயன்பாடு;

12.1.11 முறைமையைப் பேணுதல் தொடர்பான ஏதேனும் இழப்பு;

12.1.12 வேறேதேனும் முறைமை, சாதனம் அல்லது மென்பொருளுடன் இணைத்து முறைமை அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் பயன்பாடு இராதிருப்பின் மீறுகைக்கான உரிமைக்கோரிக்கை செய்ய முடியாதிருக்கும் பட்சத்தில், அத்தகைய பயன்பாட்டின்

அடிப்படையின் மீதான அல்லது அதிலிருந்து எழுகின்ற ஏதேனும் மீறுகை நடவடிக்கை அல்லது உரிமைக் கோரிக்கை; அல்லது

12.1.13 அத்தகைய இழப்பு வங்கியினால் நியாயமானமுறையில் எதிர்பார்க்கப்படத்தக்கதாக இருப்பினும் சரி அல்லது அல்லாவிடினும் சரி வங்கியின் நியாயமான கட்டுப்பாட்டுக்கு அப்பாலான ஏதேனும் நிகழ்வு, செயல், செய்யாமை அல்லது சூழ்நிலை. மேலதிகமாக, ஏதேனும் விளைவாந்தன்மையினதான இழப்பு அல்லது இலாப இழப்புக்கு எவரேனும் வாடிக்கையாளருக்கு வங்கி பொறுப்பாதலாகாது.

12.2 வங்கிக்கான நட்டோத்தரவாதம்: பின்வருவனவற்றின் காரணமாக அல்லது அவை தொடர்பாக, வங்கியினால் ஏற்கநேர்ந்த அல்லது அடையப்பட்ட வழக்குகள், பொறுப்புக்கள், உரிமைக்கோரிக்கைகள், துடர்ச்சிகள், செலவுகள், சேதங்கள், கோரிக்கைகள் மற்றும் இழப்புக்கள் எல்லாவற்றிலிருந்தும் அவற்றுக்கெதிராகவும் வரி அடிப்படையின் மீது அல்லது அதன் பின்னர் கோரிக்கையின்மீது வங்கிக்கு முழுமையாக நட்டோத்தரவாதமளித்தலும் தீங்கேற்படாது வைத்திருத்தலும் வேண்டும்:

12.2.1 வாசகம் 7.2 (பாதுகாப்பை மீறுதல்) இல் கூறப்பட்டவாறு அல்லது வேறுவகையாக பாதுகாப்பு மீறுகையொன்று இருப்பின் முறைமையை அத்துடன் / அல்லது குறிக்கப்பட்ட சாதனத்தை நிறுத்துவதற்கு அத்துடன் / அல்லது பதிகை விடுவதற்கு (Log off) வாடிக்கையாளர் தவறுதல்;

12.2.2 வரையறையின்றி, சட்டமுரணான, நிறைவுபெறாத, தெளிவற்ற அத்துடன் / அல்லது பிழையான அல்லது (சென்றடையாமை அல்லது தவறாக சென்றடைந்தமை காரணமாக) வங்கியினால் ஒரு போதும் பெறப்பட்டிராத அல்லது வங்கியினால் தாமதித்துப் பெறப்பட்ட ஒரு அறிவுறுத்தல் உட்பட அறிவுறுத்தல் ஒன்றின் மீது அல்லது அறிவுறுத்தலொன்றை திருத்துவதற்கான அல்லது இரத்துச்செய்வதற்கான கோரிக்கையொன்றின் மீது வங்கி செயலாற்றுதல் அல்லது செயலாற்றாது தவிர்ந்திருத்தல்;

12.2.3 நிதிசார் தகவல்களில் பிழைகள் அல்லது விட்டுவிடுகைகள்;

12.2.4 வாசகம் 2.3 (முறைமையின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு எதுவும் இருத்தலாகாது) இனை மீறி அல்லது வேறு வகையாக முறைமை அல்லது சேவைகளின் பயன்பாடு அல்லது பிறழ்பயன்பாடு அல்லது இந்நியதி நிபந்தனைகளில் உள்ள அல்லது வங்கியினால் வாடிக்கையாளருக்கு வேறுவகையாக அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வாடிக்கையாளர், எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் அல்லது வாடிக்கையாளரின் அலுவலர்கள், ஊழியர்கள் அல்லது முகவர்கள் இணங்கியொழுகுவதற்குத் தவறுதல்;

12.2.5 வாடிக்கையாளரின் கட்டுப்பாட்டினுள் உள்ள ஏதேனும் கணினி முனைகள் அல்லது சாதனம் அல்லது தொலைத்தொடர்பாடல் சாதனத்தின் பயன்பாடு அல்லது பிறழ்பயன்பாடு;

12.2.6 வாடிக்கையாளரினால், எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட பயனரினால் அல்லது வாடிக்கையாளரின் அலுவலர்களினால், ஊழியர்களினால் அல்லது முகவர்களினால் வங்கிக்கு வழங்கப்படும் தகவல்கள்;

12.2.7 வங்கியினால் வாடிக்கையாளருக்கு, வாடிக்கையாளருடன் இணைந்த திறத்தவர்களுக்கு அல்லது வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரில் வேறு மூன்றாம் திறத்தவர்களுக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கு, அல்லது வாடிக்கையாளரின் அலுவலர்களுக்கு, ஊழியர்களுக்கு அல்லது முகவர்களுக்கு கொடுத்துதவப்படும் போது வாடிக்கையாளர் தகவல்களைப் பயன்படுத்துதல்;

12.2.8 முறைமையினூடாக கணக்குகள் தொடர்பான (எவையேனும் அறிவுறுத்தல்கள் அல்லது அறிவித்தல்களை அனுப்புவதற்கான ஏதேனும் தவறுகை உட்பட) அறிவுறுத்தல்கள், அறிவித்தல்கள், தகவல்களின் அல்லது நிதிசார் தகவல்களின் பிழையான, தாமதமான, மறைகுறியாக்கப்படாத அல்லது நிறைவுசெய்யப்படாத அனுப்புகை;

12.2.9 வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ள எவையேனும் மீளளிக்கப்படக்கூடிய தொகைகள், அத்துடன்

12.2.10 வங்கியானது பின்வருமாறு இருக்கின்றவிடத்து அறிவுறுத்தலொன்றை நிறைவேற்றுதல் அல்லது நிறைவேற்றுவதற்குத் தவறுதல்:

(i) வாடிக்கையாளரின் இயைபான கணக்கில் உள்ள மீதி அல்லது அக்கணக்குக்கு ஏற்புடையதான உச்சவரம்பு அறிவுறுத்தலின் நோக்கங்களுக்காக போதியதாக இல்லாதவிடத்து;

(ii) வாடிக்கையாளரின் வங்கித்தொழில் வசதிகள் அல்லது உரிமைகள் ஏதேனும் வழியில் வங்கியினால் இடைநிறுத்தப்பட்டுள்ளவிடத்து;

(iii) வங்கியானது, அறிவுறுத்தல் அல்லது அது தொடர்புபடுகின்ற கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சட்ட வழக்குநடவடிக்கைகளை அறிகின்றவிடத்து;

(iv) வங்கியானது அறிவுறுத்தலை நிறைவேற்றியுள்ளது அல்லது வங்கியானது அறிவுறுத்தலை நிறைவேற்றாது என வங்கி வாடிக்கையாளருக்கு அறிவித்துள்ளவிடத்து; அல்லது

(v) வாடிக்கையாளர் இந்நியதி நிபந்தனைகளை மீறியுள்ளவிடத்து.

இந்நட்டோத்தரவாதம் வாடிக்கையாளரினால் வங்கிக்கு வழங்கப்படும் வேறு எவையேனும் நட்டோத்தரவாதங்களுக்கு மேலதிகமானதாகும் என்பதுடன் அவற்றை தரம்குறைப்பதாக இருத்தலாகாது.

12.2.11 எத்தகையதுமான ஏதேனும் முறையில் Neos Corporate இனைப் பயன்படுத்தி வாடிக்கையாளரினால், அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களினால் அல்லது வாடிக்கையாளரின் அலுவலர்களினால், ஊழியர்களினால் அல்லது முகவர்களினால் மற்றும் இலத்திரனியல் ரீதியில் அனுப்பப்படும் தரவுகளின் ஏதேனும் இழப்பு அத்துடன் / அல்லது பிறழ்நெறிப்படுத்துகைக்கு எதிராக அத்துடன் வங்கியானது எழுத்திலான கோரிக்கையொன்றின் மீது வாடிக்கையாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கு மூலக் கடவுச்சொல்லை / கடவுச்சொற்களை அத்துடன் /அல்லது அடுத்துப்பின்னரான கடவுச்சொற்களை தோற்றுவிப்பதன் மற்றும் வழங்குவதன் காரணமாக

12.3 இறப்பு அல்லது தனிப்பட்ட ஊறு: இந்நியதி நிபந்தனைகளில் உள்ள எதுவும் இந்நியதி நிபந்தனைகள் தொடர்பில் எவரேனும் திறத்தவரின் கவனயீனம் அல்லது அவரது ஊழியர்களின் முகவர்களின் அல்லது கீழ் ஒப்பந்ததாரர்களின் கவனயீனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இறப்பு அல்லது தனிப்பட்ட ஊறு அல்லது ஏமாற்றுத் தீங்கியலுக்கு அத்திறத்தவரின் பொறுப்பை வரையறுத்தலாகாது.

12.4 மேலதிகப் பொறுப்புக்கள் எதுவும் இருத்தலாகாது: இப்பன்னிரண்டாம் வாசகம் (பொறுப்பு மற்றும் நட்டோத்தரவாதம்) இந்நியதி நிபந்தனைகளில் உள்ள வேறு எல்லா வாசகங்களையும் விட மேலோங்குகின்றது என்பதுடன் முறைமை, சேவை மட்ட நியமங்கள், பயனர் வழிகாட்டி, கணக்கு பற்றிய பொறுப்பாணைகள் மற்றும் சேவைகள் தொடர்பில் ஒப்பந்தத்தில் அல்லது தீங்கியலில் வாடிக்கையாளருக்கான வங்கியின் முழுமையான பொறுப்பை எடுத்துக்கூறுகின்றது.

**13. வாடிக்கையாளரின் பிரதிநிதித்துவங்கள் மற்றும் நம்புறுதிகள்:** வாடிக்கையாளர் பின்வருமாறு வங்கிக்கு பிரதிநிதித்துவம் செய்கின்றதுடன் வங்கியின் நன்மைக்கு நம்புறுதியளிக்கின்றது:

13.1 நிலை: அவரது கூட்டிணைப்பு நியாயாதிக்கத்தின் சட்டங்களின்கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்டு செல்லுபடியான வகையில் காணப்படுதல்.

13.2 தத்துவங்கள்: இந்நியதிநிபந்தனைகள், சேவை மட்ட நியமங்கள் மற்றும் பயனர் வழிகாட்டியின் கீழ் உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு, அதன் உரிமைகளைப் பிரயோகப்பதற்கு அதன் கடப்பாடுகளைப் புரிவதற்கு மற்றும் அவற்றுடன் இணங்கியொழுகுவதற்கான தத்துவத்தைக் கொண்டுள்ளது.

13.3 அதிகாரவளிப்பும் சம்மதங்களும்: பின்வருவனவற்றைச் செய்வதற்கென (அவசியமான உரிமங்கள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சம்மதங்களைப் பெறுதல் மற்றும் பதிவுகள் மற்றும் அதுபோன்றவற்றைச் செய்தல் உட்பட) எடுக்கப்படவேண்டிய, நிறைவேற்றப்படவேண்டிய மற்றும் செய்யப்படவேண்டிய ஏற்புடையனவான எல்லாச் சட்டங்களின் கீழும் பணிப்புரைகளின் கீழும் தேவைப்படுத்தப்பட்ட எல்லா நடவடிக்கைகளும், நிலைமைகளும் மற்றும் காரியங்களும்.

(i) இந்நியதி நிபந்தனைகள், சேவை மட்ட நியமங்கள் மற்றும் பயனர் வழிகாட்டியின்கீழ் வாடிக்கையாளரை சட்டமுறையாக உடன்படிக்கையைச் செய்துகொள்வதனை அவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதனை மற்றும் அவரது கடப்பாடுகளைப் புரிந்து அவற்றுடன் இணங்கியொழுகுவதனை இயலச்செய்வதற்கும்.

(ii) அக்கடப்பாடுகள் செல்லுபடியானவை, சட்டரீதியாக பிணிக்கப்பட்டவை மற்றும் வலுவுறுத்தப்படத்தக்கன என உறுதிப்படுத்துவதற்கும்; அத்துடன்

(iii) எடுக்கப்பட்டதாக, நிறைவேற்றப்பட்டதாக மற்றும் செய்யப்பட்டதாக எல்லா இயைபான நியாயாதிக்கங்களின் நீதிமன்றங்களிலும் இந்நியதிநிபந்தனைகளை, சேவை மட்ட நியமங்களை மற்றும் பயனர் வழிகாட்டியை சான்றில் ஏல்தகவுடையதாக ஆக்குவதற்கும்.

13.4 மீறாமை : இந்நியதி நிபந்தனைகள், சேவை மட்ட நியமங்களின்கீழ் வாடிக்கையாளரின் உரிமைகளைப் பிரயோகித்தல் அத்துடன் / அல்லது அவரது கடப்பாடுகளைப் புரிதல் அல்லது அவற்றுடன் இணங்கியொழுகுதலுக்கான அவரது நுழைவு பின்வருவனவற்றை மீறுவதில்லை மற்றும் மீறாது:

(i) அவர் அமைந்தவராகவுள்ள ஏதேனும் சட்டம்;

(ii) அதன் அமைப்பக விதிகள் அல்லது வேறு அமைப்புருவாக்க ஆவணங்கள்; அல்லது

(iii) அவர் திறத்தவரொருவராகவுள்ள எவையேனும் நியதி நிபந்தனைகள்.

13.5 கடப்பாடுகளால் பிணிக்கப்படுதல்:
இந்நியதி நிபந்தனைகள், சேவை மட்ட நியமங்கள் மற்றும் பயனர் வழிகாட்டியின் கீழ் அவரது கடப்பாடுகள் செல்லுபடியானவை, பிணிக்கப்படத்தக்கவை மற்றும் வலுவுறுத்தப்படத்தக்கவை;

13.6 மீளச்செய்தல்: வாசகம் 13.1 இலிருந்து 13.5 வரையான பிரதிநிதித்துவங்கள் மற்றும் நம்புறுதிகள் ஒவ்வொன்றும் இந்நியதி நிபந்தனைகளின் திகதியன்று சரியானதும் அப்போதைக்கு காணப்படுகின்ற சூழ்நிலைக்கு குறிப்பீடு செய்வதன் மூலம் மீளச் செய்யப்பட்டது என்றாற்போன்று வாடிக்கையாளரினால் அறிவித்தலொன்று வழங்கப்படும் ஒவ்வொரு திகதியன்றும் சரியானதாகவும் இருக்கும் அதனுடன் இணங்கியொழுகவும்படும்.

**14. காலம் மற்றும் முடிவுறுத்துகை**

14.1 காலம்: இதன்கண் அளிக்கப்பட்ட சேவைகளும் உரிமைகளும் இந்நியதி நிபந்தனைகளின் முதலாம் பக்கத்தில் தரப்பட்டுள்ள திகதியிலிருந்து இதன் நியதிகளுக்கு இணங்க முடிவுறுத்தப்படும் வரை பயனுறுதல் வேண்டும்.

14.2 முடிவுறுத்துகை: இந்நியதி நிபந்தனைகளில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், சேவைகளானவை;

14.2.1 இதன்கண் திறத்தவர்களின் கடப்பாடுகளின் செயல்நிறைவேற்றம் அத்திறத்தவரின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தீ, வெள்ளம், போர், விபத்து, தொற்று அல்லது வேறு எவையேனும் தடுக்கொனா வல்இக்கட்டுச் செயல்கள் அல்லது நிகழ்வுகள் காரணமாக தடுக்கப்படின் எவரேனும் திறத்தவர் மற்றைய திறத்தவருக்கு ஐந்து (5) வேலை நாட்களுக்குக் குறையாத எழுத்திலான முடிவுறுத்துகை அறிவித்தலை வழங்குவதன் மூலம் முடிவுறுத்தப்படலாம்;

14.2.2 எவரேனும் திறத்தவர் மற்றைய திறத்தவருக்கு முப்பது (30) நாட்களுக்குக் குறையாத எழுத்திலான முடிவுறுத்துகை அறிவித்தலை வழங்குவதன் மூலம் முடிவுறுத்தப்படலாம்.

14.2.3 பின்வருமாறு இருப்பின் வங்கியின் தனித்தற்றுணிபில் அதனால் தீர்மானிக்கப்பட்டவாறு உடனடியாக வங்கியினால் முடிவுறுத்தப்படலாம்:

(i) வாடிக்கையாளரின் நிதி நிலைமையில் முக்கியமான பங்கமான மாற்றமொன்று இருப்பின்; அல்லது

(ii) வாடிக்கையாளர் ஏதேனும் முக்கியமான அம்சத்தில், இந்நியதி நிபந்தனைகள், சேவை மட்ட நியமங்கள், கணக்கொன்று பற்றிய பொறுப்பாணை, ஒரு சேவை உடன்படிக்கை

மற்றும் பயனர் வழிகாட்டியின் கீழ் வாடிக்கையாளரின் கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறின்

14.2.4 இந்நியதிநிபந்தனைகளின் கீழ் வங்கி அல்லது வாடிக்கையாளரின் கடப்பாடுகளைப் புரிவதற்கு அல்லது அவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு ஏதேனும் ஏற்புடையதான சட்டம் அல்லது பணிப்புரைக்கு முரணாக வந்தால் தன்னிச்சையாக முடிவுறுத்தப்படலாம்;

14.2.5 எல்லாக் கணக்குகளும் மூடப்படுவதனைத் தொடர்ந்து தன்னிச்சையாக முடிவுறுத்தப்படலாம்; அல்லது

14.2.6 ஏதேனும் செயல் அல்லது காரியத்தின் புரிகை அல்லது விட்டுவிடுகை ஏதேனும் ஏற்புடையதான சட்டத்திற்கு அல்லது பணிப்புரைக்கு முரணாக இருக்கின்றதும் முறைமையை அத்துடன் / அல்லது வங்கி வாடிக்கையாளருக்கு அத்துடன் / அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள் எவருக்கும் சேவைகளை வழங்குவதனை பங்கமாகப் பாதிக்கக்கூடியதுமான அச்செயலை அல்லது காரியத்தை வாடிக்கையாளர் அத்துடன் / அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுள் எவரும் புரிந்தால் அல்லது புரியாது தவிர்ந்திருந்தால் தன்னிச்சையாக முடிவுறுத்தப்படலாம்.

14.3 பாதிக்கப்படாத திரண்ட உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்:
இச்சேவைகளின் முடிவுறுத்துகை (எவ்வகையிலும் நிகழ்ந்ததாயினும்) எவரேனும் திறத்தவரின் எவையேனும் திரண்ட உரிமைகளை அல்லது பொறுப்புக்களைப் பாதித்தலாகாது அல்லது அத்தகைய முடிவுறுத்துகையின்மீது அல்லது அதன் பின்னர் வலுவுக்கு வருவதற்கு அல்லது தொடர்ந்து வலுவிலிருப்பதற்கு வெளிப்படையாக அல்லது உட்கிடையாக உட்கருதப்பட்ட இந்நியதி நிபந்தனைகளின் எவையேனும் ஏற்பாடுகள் வலுவுக்கு வருவதனை அல்லது தொடர்ந்து வலுவிலிருப்பதனைப் பாதித்தலாகாது.

**15. குறித்தளிப்பு**

இந்நியதி நிபந்தனைகளின் கீழான வங்கியின் கடப்பாடுகள் சேவை மட்ட நியமங்களுடன் சேர்த்து வங்கியின் துணை நிறுவனங்கள், இணைக்கப்பெற்ற நிறுவனங்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் எவருக்கும் குறித்தளிக்கப்படலாம் அல்லது அவற்றினால் நிறைவேற்றப்படலாம் என்பது தவிர, திறத்தவர் ஒருவர் மற்றைய திறத்தவரின் எழுத்திலான சம்மதமின்றி சேவை மட்ட நியமங்களுடன் சேர்த்து இந்நியதிநிபந்தனைகளின் கீழ் அவரது உரிமைகளை அல்லது கடப்பாடுகளை குறித்தளித்தலோ அல்லது கைமாற்றுதலோ ஆகாது. அத்தகைய எடுத்துரைப்பு, குறித்தளிப்பு அல்லது கைமாற்றுகை காரணமாக வாடிக்கையாளரின் உரிமைகள் குறைக்கப்படுகின்ற பட்சத்தில், வங்கியானது வாடிக்கையாளரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் எனவும் வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

**16. திருத்தம்**

16.1 இந்நியதி நிபந்தனைகளுக்கான திருத்தம்: வாசகம் 3.1 (முறைமையைப் பயன்படுத்துவதற்கான உரிமைகளுக்கான கட்டணங்கள் மற்றும் நிறுவுகைக் கட்டணம்) இற்கு அமைய, வங்கியானது அதன் தனித்தற்றுணிபில் அறிவித்தலுடன் இந்நியதி நிபந்தனைகளுள் எவற்றையும் திருத்துவதற்கு, குறைநிரப்புவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு எந்நேரத்திலும் உரித்துடையதாதல் வேண்டும்; அவ்வறிவித்தல் வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய திருத்தம், குறைநிரப்பி அல்லது வேறுபடுத்துகை வாடிக்கையாளர் மீது பிணிக்கப்படுததாதலும் வேண்டும்.

16.2 பயனர் வழிகாட்டிக்கான திருத்தங்கள்: வங்கியானது பயனர் வழிகாட்டியை திருத்தலாம், குறைநிரப்பலாம், மீளக் கூறலாம் அல்லது மாற்றீடு செய்யலாம் என்பதுடன் அது Neos Corporate இன் பதிகை புகுதல் (log in) பக்கத்தில் பதாகை ஒன்றாக வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

16.3 வங்கியானது, Neos Corporate இன் பயன்பாட்டுக்கு இணைக்கப்பட்ட சிறப்புரிமைகளைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் இதற்கு இணைக்கப்பட்ட இச்சிறப்புரிமைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, சேர்ப்பதற்கான அல்லது திருத்துவதற்கான முழுமையான தற்றுணிபை வங்கியின் இணையத்தளத்தில் அதனை வெளியிடுவதன் மூலம் கொண்டிருத்தல் வேண்டும்.

16.4 வங்கியானது, விண்ணப்பத்தைப் பின்பற்றி வாடிக்கையாளரின் பெயரில் திறக்கப்பட்ட ஏதேனும் கணக்கை / கக்குகளை இணைத்தல் அல்லது தொடர்பறுத்தல் வேண்டும். அத்தகைய இணைப்புக்கள் அல்லது தொடர்பறுத்தல்கள் வங்கியின் நிலவுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் காரணமாகவிருக்கலாம் என வாடிக்கையாளர் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றார்.

16.5 வங்கியானது, காலத்துக்குக்காலம் சேவைகளுக்கு புதிய வசதிகளை/ விருப்பத்தெரிவுகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும். வாடிக்கையாளர் அத்தகைய சேவைகளுக்கு ஏற்புடையனவான நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகுவதற்கு இத்தால் உடன்படுகின்றார்; அச்சேவைகளை வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடுவதன் மூலம் வாடிக்கையாளருக்கு அவை பற்றி அறிவிக்கப்படுதல் வேண்டும். உடன்பட்டுக்கொள்ளக்கூடியதாயின் வாடிக்கையாளர் அத்தகைய சேவைகளைப் பயன்படுத்துவதற்கு பதிவுசெய்யமுடியும்.

16.6 Neos Corporate இன் பயன்பாடானது, Neos Corporate இனால் அல்லது வேறுவகையாக மேவப்படும் எல்லாச் சேவைகளையும், வசதிகளையும் மற்றும் கொடுக்கல்வாங்கல்களையும் ஆளும் வங்கியின் நிலவுகின்ற உறுப்புரைகள், நிபந்தனைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

**17. நானாவிதமானவை**

17.1 மீறுகை பற்றிய அறிவித்தல் மற்றும் புலமைச்சொத்து மீறுகை: வாடிக்கையாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனர் ஒருவரினால் அல்லது மூன்றாம் திறத்தவர் ஒருவரினால் இந்நியதி நிபந்தனைகளின் ஏதேனும் மீறுகை அல்லது இந்நியதி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட வங்கியின் புலமைச்சொத்து உரிமைகளின் ஏதேனும் மீறுகை அல்லது முறைமை ஒரு சேவை மூன்றாம் திறத்தவர் ஒருவரின் உரிமைகளை மீறுகின்றது என்ற ஏதேனும் சார்த்துகை பற்றி வாடிக்கையாளர் அறியவந்தால் அல்லது அவை பற்றி சந்தேகிப்பதற்கான காரணத்தைக் கொண்டிருந்தால் வாடிக்கையாளர் உடனடியாக வங்கிக்கு அவை பற்றி அறிவித்தல் வேண்டும்.

17.2 முழுமையான உடன்படிக்கை: விண்ணப்பத்துடன் சேர்த்து இந்நியதி நிபந்தனைகள், Neos Corporate தீர்மானம், சேவை மட்ட நியமங்கள், Neos Corporate சுயவிபரத் திருத்தப் படிவம் (ஏதேனுமிருப்பின்) ஏற்கனவே உள்ள பயனர்களுக்கு Neos Corporate கணக்குச் சேர்த்தல்/ நீக்குதல் படிவம் (ஏதேனும் இருப்பின்), பயனர் வழிகாட்டி, கணக்கு பற்றிய பொறுப்பாணைகள், வசதி உடன்படிக்கைகள் மற்றும் பொதுவான வியாபார நிபந்தனைகள், ஒப்பந்தம் மூலம் அல்லது வேறு வகையாக தவிர்க்கப்படக்கூடியவாறான சட்டத்தினால் உட்கிடையாகக் கூறப்பட்ட வேறு எவையேனும் நியதிகளைத் தவிர்த்து இதன் தேதியில் அதன்கண் உள்ள விடயப்பரப்பு தொடர்பில் வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையில் முழுமையான உடன்படிக்கையை (உடன்படிக்கை) அமைத்துருவாக்குகின்றன என்பதுடன் இந்நியதிநிபந்தனைகளின் விடயப்பரப்பு தொடர்பில் வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையிலான ஏதேனும் எழுத்திலான முன்னைய அல்லது வாய்மொழி மூலமான உடன்படிக்கையை மேலுறுகின்றன. இவ்வுடன்படிக்கைக்கு வெளிப்படையாக கூட்டிணைக்கப்படாத ஏதேனும் பிரதிநிதித்துவம், நம்புறுதி அல்லது பொறுப்பேற்பு மூலம் இவ்வுடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு வாடிக்கையாளர் தூண்டப்பட்டிருக்கவில்லை என அவர் ஒப்புக்கொள்கின்றார். சட்டத்தினால் இதுவரையில் அனுமதிக்கப்பட்டவாறும் மோசடியொன்றின் விடயத்தில் தவிரவும், இவ்வுடன்படிக்கை தொடர்பில் செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் பிரதிநிதித்துவம், நம்புறுதி அல்லது பொறுப்பேற்பு தொடர்பான வாடிக்கையாளரின் உரிமைகள் மற்றும் பரிகாரங்கள் மட்டும் (தீங்கியலில் உள்ளவை அல்லது நியதிச்சட்டத்தின்கீழ் எழுகின்றவை உட்பட) வேறு எல்லா உரிமைகளையும் பரிகாரங்களையும்

தவிர்த்து இவ்வுடன்படிக்கையின் நியதிகளின் மீறுகைகளுக்காகவிருத்தல் வேண்டும் என வாடிக்கையாளர் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றார்.

17.3 முரண்பாடுகளும் ஒவ்வாமைகளும்:

இந்நியதி நிபந்தனைகள், சேவை மட்ட நியமங்கள், விணணப்பம், Neos Corporate சுயவிபர திருத்தப்படிவம் (ஏதேனும் இருப்பின்), ஏற்கனவே உள்ள பயனர்களுக்கான கணக்கு சேர்த்தல் / நீக்குதல் படிவம் (ஏதேனுமிருப்பின்), பயனர் வழிகாட்டி, கணக்கு பற்றிய பொறுப்பாணைகள், வசதி உடன்படிக்கைகள், பொதுவான தொழில் நிபந்தனைகள் என்பவற்றுக்கு மத்தியில் அல்லது அவற்றுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கின்றபட்சத்தில், பின்வரும் இறங்குவரிசை முன்னுரிமை ஒழுங்கில் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்:

17.3.1 இந்நியதி நிபந்தனகள் மற்றும் சேவை மட்ட நியமங்கள்:

17.3.2 கணக்கு பற்றிய பொறுப்பாணைகள் மற்றும் வசதி உடன்படிக்கைகள்;

17.3.3 விண்ணப்பம் Neos Corporate சுயவிபர திருத்தப் படிவம், ஏற்கனவே உள்ள பயனர்களுக்கான Neos Corporate கணக்கு சேர்த்தல் / நீக்குதல் படிவம்

17.3.4 பொதுவான வியாபார நிபந்தனைகள் ; அத்துடன்

17.3.5 பயனர் வழிகாட்டி; அத்துடன்

இந்நியதி நிபந்தனைகளில் மேலே நிரற்படுத்தப்பட்ட அந்த வேறு ஆவணங்கள் எவற்றுக்குமான குறிப்பீடுகள், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறு, குறைநிரப்பப்பட்டவாறு, புதுப்பிக்கப்பட்டவாறு, மீளக்கூறப்பட்டவாறு அல்லது மாற்றீடு செய்யப்பட்டவாறு அவ்வாவணங்களுக்கான குறிப்பீடுகளாக இந்நியதி நிபந்தனைகள் முழுவதும் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

17.4 பகுதியளவில் செல்லுபடியற்ற தன்மை:

இந்நியதி நிபந்தனைகள், சேவை மட்ட நியமங்கள் அல்லது பயனர் வழிகாட்டியின் ஏற்பாடுகள், ஏற்புடையனவான சட்டங்கள் மற்றும் பணிப்புரைகளுக்கு அமைந்தனவாகவும் அவற்றினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மட்டும் ஏற்புடையனவாதலும் வேண்டும் என்பதுடன் ஏதேனும் நியாயாதிக்கத்தின் சட்டத்தின்கீழ் இந்நியதி நிபந்தனைகள், சேவை மட்ட நியமங்கள், பயனர் வழிகாட்டி அல்லது ஏதேனும் சேவைக் கைந்நூலின் ஏதேனும் ஏற்பாட்டின் சட்டமுரணான தன்மை, செல்லுபடியற்ற தன்மை அல்லது வலுவுறுத்தப்படமுடியாமை வேறு ஏதேனும் நியாயாதிக்கத்தின்கீழ் அதன் சட்டமுறையான தன்மையை, செல்லுபடியான

தன்மையை அல்லது வலுவுறுத்தப்படமுடியுமான தன்மையைப் பாதித்தலாகாது அல்லது வேறு ஏதேனும் ஏற்பாட்டின் சட்டமுறையான தன்மையை செல்லுபடியானதன்மையை அல்லது வலுவுறுத்தப்படமுடியுமான தன்மையைப் பாதித்தலாகாது.

17.5 தலைப்புக்கள் குறிப்பீட்டுக்காக மட்டும்:
இந்நியதி நிபந்தனைகளின் தலைப்புக்கள் இலகுவான குறிப்பீட்டுக்கு மட்டுமே என்பதுடன் இந்நியதிநிபந்தனைகளின் பொருள்கோடல் அல்லது அமைப்பை எவ்வகையிலும் பாதித்தலாகாது.
17.6 உட்கிடையாகக் கூறப்பட்ட நியதிகளைத் தவிர்த்தல்: இந்நியதி நிபந்தனைகள் மற்றும் சேவை மட்ட நியமங்கள், சட்டத்தில் அல்லது வழக்காறு மூலம் உட்கிடையாகக் கூறப்பட்ட அல்லது திறத்தவர்களுக்கிடையிலான வேறு எவையேனும் நியதிநிபந்தனைகளிலிருந்து வேறுவகையாக எழுகின்ற ஏதேனும் நம்புறுதி, நிபந்தனை அல்லது வேறு பொறுப்பேற்பை அல்லது திறத்தவர்களினால் செய்துகொள்ளப்பட்ட ஒரு பிணிக்கப்படும் எழுத்திலான சட்ட உடன்படிக்கையில் அடங்கியிராத ஏதேனும் பிரதிநிதித்துவத்தை வெளிப்படையாகத் தவிர்த்தல் வேண்டும். திறத்தவர்கள் அவ்வாறு தவிர்க்கப்பட்ட ஏதேனும் நம்புறுதி, நிபந்தனை, பொறுப்பேற்பு, உடன்படிக்கை அல்லது பிரதிநிதித்துவத்தில் தங்கியிருந்து இந்நியதி நிபந்தனைகளைச் செய்துகொள்வதில்லை அத்துடன் / அல்லது ஏற்றுக்கொள்வதில்லை என அவர்கள் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்துகின்றனர்.

17.7 அறிவித்தல்கள்: சேவை மட்ட நியமங்களுடன் சேர்த்து இந்நியதி நிபந்தனைகள் தொடர்பில் வாடிக்கையாளரினால் அல்லது வங்கியினால் வழங்கப்படவேண்டிய ஏதேனும் அறிவித்தல் (இலத்திரனியல் ரீதியில் அனுப்பப்பட்டாலொழிய) எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் இயைபான விண்ணப்பத்தில் அல்லது சமீபத்திய சுயவிபரத் திருத்தப் படிவத்தில் தரப்பட்டவாறு (விடயத்துக்கேற்ப) இயைபான திறத்தவரின் முகவரிக்கு (மின்னஞ்சல் முகவரி உட்பட) அல்லது தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பப்படுதலும் வேண்டும். எல்லா அறிவித்தல்களும் வேறு வகையாக உடன்பட்டாலொழிய ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும்.

17.8 நியதி நிபந்தனைகள் கடந்த காலப் பயன் கொண்டதாகவிருத்தல் வேண்டும்: இதன்கண் விவரிக்கப்பட்டவாறு இலத்திரனியல் நிதிச் சேவைகளை வழங்குதல் தொடர்பில் வாடிக்கையாளர் மற்றும் வங்கி எவையேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ள ஏதேனும் வியடத்தில், இயைபான நேரத்தில் இந்நியதிநிபந்தனைகள் செய்துகொள்ளப்பட்டிராதிருந்திருக்கின்ற போதிலும் அச்சேவைகளின் வழங்குகையை அவை ஆளும் என உடன்பட்டுக்கொள்ளப்படுகின்றது.

**18. ஆளும் சட்டம் மற்றும் நியாயாதிக்கம்:**

18.1 சட்டத்தின் தெரிவு: இந்நியதி நிபந்தனைகள் உட்பட உடன்படிக்கையானது, இலங்கையின் சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றுக்கிணங்க பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும். இந்நியதி நிபந்தனைகள் அல்லது அவற்றுக்கான ஏதேனும் திருத்தம் அல்லது சேர்க்கை உட்பட உடன்படிக்கையிலிருந்து அல்லது அது தொடர்பாக எழுகின்ற ஏதேனும் பிணக்கு, அந்நோக்கத்துக்கான இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேகமான நியாயாதிக்கத்திற்கு முன்வைக்கப்படுதல் வேண்டும்.

**19. விசாரணைகள், முறைப்பாடுகள் மற்றும் பிணக்குத் தீர்த்தல்**

19.1 Neos Corporate சேவையின் பயன்பாடு தொடர்பில் ஏதேனும் முறைப்பாடு அல்லது விசாரணை வாடிக்கையாளருக்கு இருக்கின்றபட்சத்தில், வாடிக்கையாளர் 0094 112448888 என்ற இலக்கத்தினூடாக வங்கியின் 24 மணி நேர அழைப்பு மையத்துக்கு அழைப்பை ஏற்படுத்துதல் வேண்டும் அல்லது வங்கியின் கிளையொன்றுக்கு வருகைதருதல் வேண்டும். முறைப்பாடு தீர்க்கப்படாதிருப்பின், வாடிக்கையாளர் நிதி குறைகேள் அதிகாரி அல்லது இலங்கை மத்திய வங்கியினூடாக உதவியை நாடலாம்.

19.2 வங்கிக்கூற்றுத் திகதியிலிருந்து 14 நாட்களினுள் வாடிக்கையாளரினால் அவதானிக்கப்படும் கொடுக்கல்வாங்களில் உள்ள ஏதேனும் பிழை, ஒவ்வாமை அல்லது விட்டுவிடுகை பற்றி வங்கியின் கவனத்திற்கு வாடிக்கையாளர் கொண்டுவருதல் வேண்டும்.

**20 வாடிக்கையாளரின் வெளிப்படுத்துகை**

20.1 (இதனகத்துப்பின்னர் "வங்கி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நஷனல் டிவலப்மெண்ட் பாங்க் பிஎல்சி ஆனது Neos Corporate வசதியை எனக்கு வழங்குவதற்கான எனது கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுவதனைக் கருத்திற்கொண்டு, இந்நியதி நிபந்தனைகள் எனக்குத் தெளிவுபடுத்தப்பட்டு என்னால் விளங்கிக்கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என நான் இத்தால் உடன்படுகின்றேன். வங்கியின் Neos Corporate வசதியை ஆளும் எல்லா நியதி நிபந்தனைகளுக்கும் அமைந்தொழுகுவதற்கு நான் உடன்படுகின்றேன். வங்கியினால் வழங்கப்படும் பாதுகாப்பு மற்றும் காப்பு அறிவுறுத்தல்களுக்கு நான் அமைந்தொழுகாவிடின் ஏற்படுகின்ற ஆபத்துக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் என நான் வெளிப்படுத்துகின்றேன். வங்கியானது எனது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பாக அல்லது அதிலிருந்து எழுகின்ற வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், பொறுப்புக்கள் மற்றும் உரிமைக்கோரிக்கைகள், விடயங்கள், சேதங்கள், செலவுதொகைகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராக வங்கியை நட்டோத்தரவாதமளிக்கப்பட்டதாக வைத்திருப்பதற்கு நான் உடன்படுகின்றேன். எவரேனும் ஆளினால் பயனர் ID மற்றும் கடவுச்சொல்லின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு பற்றிய ஏதேனும் செயல் அல்லது எத்தனிப்பு அல்லது Neos Corporate UB சாவி / சொப்ட் டோக்கன் இற்கான அதிகாரமளிக்கப்படாத அணுகுகை பற்றிய

ஏதேனும் செயல் அல்லது எத்தனிப்பு பற்றி எனக்கு அறியவந்தால் அதுபற்றி நான் உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும் என உறுதிப்படுத்துகின்றேன்.

20.2 வங்கியானது எனக்கான குறிப்பீடு இன்றி கணக்கு (கணக்குகள்) சம்பந்தமாக வேறு எவையேனும் வங்கிகள், கடன் தகவல் பணியகம் (CRIB) அல்லது தகவல்களைப் பெறுவதற்கு சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் மற்றும் எல்லா விசாரணைகளையும் அவ்வாறு தெரிவுசெய்தால் வங்கி அவற்றுக்குப் பதிலளிப்பதற்கும் அவற்றை வழங்குவதற்கும் அதிகாரமளிக்கின்றேன். ஐயத்தைத் தவிர்ப்பதற்காக அத்தகைய ஏதேனும் பதில் வங்கிக்கான குறிப்பீடொன்றையும் உள்ளடக்கலாம்.

20.3 மேலேயுள்ள Neos Corporate சேவை தொடர்பான நியதி நிபந்தனைகளை நான் வாசித்து, விளங்கிக்கொண்டு அவற்றினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுகின்றேன் என இத்தால் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

**1. ஒரு பணிப்பாளரைக்கொண்ட கம்பெனி**

| | |
|---|---|
| …………………………… | …………………………… |
| பணிப்பாளர் | கம்பெனிச் செயலாளர் |
| பொறிக்கப்பட்ட கம்பெனி இலச்சினை (இருப்பின்) | பொறிக்கப்பட்ட கம்பெனி இலச்சினை (இருப்பின்) |
| ……………………………… | ……………………………… |
| பெயர் மற்றும் தே.அ.அ. இலக்கம் | பெயர் மற்றும் தேஅ.அ. இலக்கம் |
| ………………………….. | ………………………….. |
| சாட்சி | சாட்சி |
| ……………………………… | ……………………………… |
| பெயர் மற்றும் தே.அ.அ. இலக்கம் | பெயர் மற்றும் தே.அ.அ. இலக்கம் |

……………………… ……………………..

திகதி திகதி

**2. ஒன்றுக்கு மேற்பட்ட பணிப்பாளர்களைக் கொண்ட கம்பெனி**

……………………………. …………………………….

பணிப்பாளர் பணிப்பாளர்

பொறிக்கப்பட்ட கம்பெனி இலச்சினை (இருப்பின்) பொறிக்கப்பட்ட கம்பெனி இலச்சினை (இருப்பின்)

………………………………. ……………………………….

பெயர் மற்றும் தே.அ.அ. இலக்கம் பெயர் மற்றும் தே.அ.அ. இலக்கம்

……………………………. …………………………….

சாட்சி சாட்சி

………………………………. ……………………………….

திகதி திகதி

……………………… ……………………..

பெயர் மற்றும் தே.அ.அ. இலக்கம் பெயர் மற்றும் தே.அ.அ. இலக்கம்